187

உ

பரமபதி துணை.

மகா மகத்துவம் பொருந்திய

## அகத்தியர்

# கற்பமுப்பு குரு நூல்.

மனோன்மணி தீட்சை 100ம், நாற்பத்தி முக்கோண

பூஜா விதியும் சேர்ந்தது.

MADRAS
487
3-5



ஜீ. இராமசாமிக் கோன்

[illegible] குருசாமிக்கோனார் சன்

[illegible]ல புதுமண்டபம் மதுரை.

1959 விலை ரூ 1—4—0

LC
N59
100917

உ

பரமபதி துணை.

தெட்சணாமூர்த்தி குருமுகமென்னும்

## அகத்தியமுனிவரருளிய

மனோன்மணி திட்சை 100 நாற்பத்தி

முக்கோண பூஜாவிதியும் சேர்ந்தது.

# கற்பமுப்புகுருநூல் 100.



28 AUG 1959
MADRAS

இந்நூல் கிடைக்கும் இடம்:-

## இ. ராம. குருசாமிக்கோனார் சன்

ஜி. இராமசாமிக்கோன்,

புத்தகசாலை, புதுமண்டபம் மதுரை.

காபி ரைட்) 1959 விலை ரூ 1—4—0

100917

மதுரை வடக்குமாசி வீதி, குருசாமிக்கோனார் தெரு,
ஸ்ரீ ராமச்சந்திர விலாசம் பிரஸில்
பதிப்பிக்கப்பெற்றது.
காப்பி 500, மூன்றாம் பதிப்பு.

உ

பரமபதி துணை.



# அகத்திய முனிவ ரருளிச்செய்த
# கற்ப முப்புக் குருநூல் 100.

காப்பு.

ஆதிவிந்து நாதமுடன் வாலைகாப்பு
அருள்மிகுந்த அகாரஉகா ரங்கள்காப்பு
சோதிமய மாயிலங்குஞ் சிகாரங்காப்பு
சுகமான குண்டலியா மகாரங்காப்பு
நீதியுள சுளிமுனைக்கு ளவதரித்த
நீலியவள் பாதமதை நிதம்பூசித்து
பாதிமதி தனையணிந்த யீசன்பாதம்
பணிந்துயான் குருமுடிப்புப் பாடினேனே: (1)

தெட்சணா மூர்த்தி யென்றது.

பாடினேன் அனேகநூல் பெரிதேஅய்யா
பண்பாக அதிலிருந்து கற்பந்தன்னிற்
கூடினேன் பரிபாஷை யில்லாமற்றான்
குவலயத்தோர் பிழைப்பதற்கு இந்தநூலைத்
தேடினேன் தென்பொதிகை தனிலிருந்தேன்
சிவன்றானுந் தெட்சணா மூர்த்தியென்றோர்
நாடினே னவர்பாதம் பணிந்துகொண்டு
நானிலத்தில் மனோன்மணியை பூசித்தேனே. (2)

சித்தர் கற்பம் சாப்பிட்டது.

மனோன்மணியாள் பாதமதை மனதில்வைத்து
மார்க்கமுள்ள குருமுடிக்க வகையுங்கண்டேன்
வளம்பெருத்த தென்பொதிகை யிருக்கும்போது
மகாசித்த ரனேகர்வந்து கற்பமுண்டு
இனம்பிரித்துச் சரக்குவகை செந்தூரிக்க
ஏகமூலி கையதனை யெடுத்துக் கேட்டார்
சினமடங்கி வாதமதை சுருக்கிச் சொன்னேன்
சீர்பெறவே யாவையும்நான் சாற்றினேனே. (3)

முப்பூ முடிக்க விபரம்.

சாற்றினேன் முப்பூவின் மார்க்கந்தன்னைத்
தவசிகட்குக் கிடைக்குமல்லால் மற்றோருக்கு
ஏற்றமுடன் கிடைக்காது இந்த நூல்தான்
இனிமையுடன் சொல்லுகிறேன் நன்றாய்க்கேளு
நாற்றிசையி லுள்ளவர்க ளரியாரப்பா
நன்றாக வுந்தனுக்குத் திறந்துசொல்வேன்
ஆற்றலுட னிதையறிந்து செய்வாயானால்
அப்பனே ரிஷிசித்த னுவாய்கூறே. (4)

கூறுவேன் குருமுடிக்கும் விபரமெல்லாம்
குறிப்பாக வறிந்து செய்தோன் சித்தனாகும்
தேறுவா யின்னூலை முழுதும் பார்த்தால்
சித்தனென்று பெயர்பெறலா முலகத்துள்ளே
ஆறுதலாய்ச் சேர்ந்துகொண்டு செய்யவேண்டாம்
சுகமாகத் தனியாய்நீ யிருந்துகொண்டு
பேறுபெறச் செய்தாக்கா லாபமுண்டு
பிரியமுட னுந்தனுக்குச் செப்பினேனே. (5)

செப்புவேன் சித்தருட பாதம்போற்றி
செந்தூரம் பற்பமுறை தன்னைச்செய்ய
அற்புதமாய்ச் சொல்லுகிறேன் முப்பூதன்னை
அடக்கினேன் நூறுக்கு ளறிந்துபாரு
முப்பொருளு முடிந்தவிட மிந்நூலப்பா
முக்கண்ணன் மனோன்மணியா ளெனக்குச்சொன்னாள்

தப்பிதங்க ளில்லையடா யிந்த நூலைத்
தாய்சொன்ன படிசொன்னேன் தரணியோர்க்கே ()

தரணியிலே நீயிருந்து தாயைப்பூசி
சற்குருவை மறவாம லேற்றிப்போற்றி
அரணியமாங் காடுமலை யலையவேண்டாம்
ஆசானை யொருவருக்குங் காட்டவேண்டாம்
இரணமாய் நினைத்துநீ விடவே வேண்டாம்
திறமாக அகாரஉகா ரத்தைக்கொள்ளு
பரமாகக் கற்பமது கொள்வாயானால்
பார்தனிலே யெந்நாளு மிருப்பாய்தானே. (7)

குருமுடிக்கும் பாகம்.

தானென்ற குருமுடிக்க வகையைக்கேளு
சற்குருவி னருளாலே சாற்றுவேன்கேள்
தேனென்ற கல்லதுதான் துய்யவெள்ளை
ஜெகத்திலே மிகஉண்டு தேடிப்பார்த்தால்
ஊனென்ற தொருவருக்கும் பொருள்தோணாது
உனக்குவிதி யிருந்தாக்கா லுடனேவாய்க்கும்
ஏனென்ற கல்லதுதா னெங்கேயென்றால்
யிருக்குமிடஞ் சொல்லுகிறே னினிதாய்க்கேளே (8)

கேளப்பா ஊரடுக்க மெத்தவுண்டு
கிடையாமற் போவதில்லை கதியுண்டானால்
ஆளப்பா இல்லாக்காற் காடுதோறும்
அருபமா யிருக்குமடா அறிந்துபாரு
தாளப்பா நாட்டினிலே ரொம்பவுண்டு
நாடினாற் கிடைக்குமடா நலம்பெற்றோர்க்கு
வாளப்பா மலையாதே மயங்கிடாதே
மண்டையிலே யெழுதினது பிர்மந்தானே. (9)

பிரமமென்றும் வெள்ளையென்றும் பேதமென்றும்
பேரான கற்சுண்ணம் விந்துவென்றுந்
தருமூத்துக் கோடெடுத்த கபாலமென்றுஞ்
சங்கரனார் மண்டை யென்றுங் கல்தானென்றும்

வர்மத்தாற் காளியுட கோட்டமென்றும்
மகாமேரு கிரியென்று மாக்கல்லென்றுஞ்
செருமித்த சிகரமென்றுஞ் சிறுவீடென்றுந்
தேசமெங்கு மூளைத்தவெள்ளைக் கல்லென்பாரே. (10)

கல்லென்று மலையென்றுங் கபாலமென்றுங்
கருவின்நிலை யிதுவென்றுங் கூறுவார்கள்
அல்லடா இதுவெல்லாம் பரிபாஷைதான்
அரனுண்ட கல்லதுவும் அதுதானப்பா
சொல்லடா பலவிதமாய்ப் பிரித்துதையா
சூக்ஷமெல்லாங் கண்டுதான் சுருக்கிச் சொன்னேன்
புல்லடா முளையாத விடத்திலேதான்
பூண்டிருக்கும் பொருளதனைக் கண்டிடாயே. (11)

பொருளென்ன அருளென்ன பூமியென்ன
பொங்கிநின்ற உவருப்பு பிரமவெள்ளை
கருவென்ன இதுதாண்டா மயங்கிடாதே
கண்டபின்பு ஒருவரிடங் கருச்சொல்லாதே
தெருவிலே நில்லாதே அலைந்திடாதே
சிறுபிள்ளைப் புத்திகொண்டு திறந்திடாதே
உருவென்ன தெரிந்துகொள்ளு உனக்குத்தானும்
ஓடென்று மண்டையென்று முரைக்கலாச்சே. (12)

பிர்மக்கல் சுண்ணம்.

உரைக்குகின்ற பிர்மக்கல் லெடுத்துவந்து
ஒழுங்காக கல்லுரலி லிட்டுக்கொண்டு
வரைக்குகின்ற விருப்புலக்கை யதனாற்குத்தி
மாப்போலே யானபின்பு வாரிக்கொண்டு
குறையில்லாச் சட்டியிலே போட்டு நீயுங்
குமுறவிடு சுத்தஜலங் குளிறவூற்றி
முறையோடே ஒருநாள்தான் ஊறிற்றானல்
முத்துப்போ லிறுத்துவிடு தண்ணீர்போமே. (13)

தண்ணீர்தான் போனபின்பு மறுநீர்வாரு
சாதகமாய் மறுநாளுஞ் சாய்த்துப்போடு
புண்ணியிப் படிதசமாந் தீட்சைசெய்து
பக்குவமாய் ரவிதனிலே பொருமி நீறும்
கன்னியென்ற பழச்சாறு முங்கவிட்டு
கடுரவியிற் போட்டுவிடு காற்ருடாமல்
மண்ணிலே பிறந்தஉப்பு உவருப்பாச்சு
மகத்தான வழலையுப்பு மார்க்கந்தானே. (14)

மார்க்கமுட னிந்தஉப்பை யெடுத்துநல்ல
வாயகண்ட பீங்கானில் வாரிக்கொண்டு
மூர்க்கமுள்ள பழச்சாறு நிரம்பவிட்டு
மூட்டுவா யடுப்பினிலே தீபம்போலே
பார்க்குமுன்னே வெந்துநல்ல சுண்ணமாச்சு
பவுசுகெட்ட யெண்ணெய்யெல்லாம் பறந்துபோச்சு
ஆர்க்குமிதைச் சொல்லாதே யதிகவெள்ளை
யாகுமிந்த முப்பூவுங் குருவுமாச்சே. (15)

ஆச்சிந்த முப்பூவை யெடுத்துக்கொண்டு
அடங்காத சரக்கையெல்லா மடக்கக்கேளு
வாச்சென்ற உப்புக்குப் பேரேதென்ருல்
வழலையென்றும் விந்துவென்று மாதியென்றுங்
காச்சிந்த உசிதமென்று மூவருப்பென்றுங்
கரையோரம் வளர்ந்திருந்த கல்லுப்பென்றும்
ஆச்சியின்றன் கோவிலென்று மரனுரென்றும்
அநேகவகை சாஸ்திரங்கள் பேசுந்தானே. (16)

முப்புக்குரு சேர்க்குமுறை.

தானென்ற இந்தவுப்பு குருவுமாச்சு
சகலவித சரக்குக்குந் தாக்கிப்பாரு
வானென்ற இந்தவுப்பை வாய்நீர்விட்டு
மத்தித்துச் சரக்குகளிற் பூசிக்கொண்டு
கோனென்ற மூலிகைதான் யேகமூலி
குகைபிடித்துப் புடம்போடு செந்தூரிக்குந்
தேனென்ற பற்பமுதல் சுண்ணமாகுஞ்
செகமெல்லா மாடுகிற குருவிதாமே. (17)

குருவிலே பணவிடைதா னெடுத்துக்கொள்ளு
குளிகைக்குஞ் செந்தூர பற்பத்துக்கும்
பருகிவிடு லேகியங்கள் ரசாயனங்கள்
பத்திரமாய் மாத்திரைக்குங் கஷாயத்துக்கும்
மருகிவிடு சூரணங்கள் தயிலத்துக்கும்
மாட்டிவிடு பணவிடைதான் மருந்துசித்தி
குருவிலே அந்தந்தச் சரக்கிலேதான்
கூறுபண விடையொன்று சேர்த்துக்கொள்ளே.(18)

சவ்வீரபற்பம்.

கூறுவேன் சவ்வீரங் கட்டியாகக்
கொண்டுவந்து சுத்திசெய் தெடுத்துக்கொண்டு
பேறுபெற அப்பையுட மூலம்வாங்கி
பேசாதே குகைபோல அறுத்துத்தோண்டி
மாறுவேன் குகைக்குள்ளே சவ்வீரத்தை
வைத்துமே கிழங்காலே வாயைமூடி
சீறுபெறச் சீலைசெய்து புடந்தான்போடு
திறமாகக் குக்குடத்தில் வெள்ளையாமே. (19)

சவ்வீரச் செந்தூரம்.

வெள்ளையென்ற சவ்வீர பற்பந்தன்னை
மேதினியோர் தங்களுக்கு விள்ளாதப்பா
பிள்ளைகளே செந்தூரஞ் செய்யவென்றுற்
பெருமையுடன் கைபாகப் புதுமைமெத்த
மெள்ளவே பற்பமெல்லாம் பீங்கான்சேர்த்து
மேல்மருந்து முசுமுசுக்கைச் சாறுவிட்டு
அள்ளவே பிசறியல்லோ ரவியிற்போட்டால்
அருணநிறச் செந்தூர மாகுந்தானே. (20)

தானென்ற சவ்வீர செந்தூரத்தைத்
தயவாகப் பணவிடைதா னெடுத்து நீயுந்
தேனென்ற சிறுதேனிற் சேர்த்துக்கொண்டாற்
தீருத சூலைமுதற் குன்மவாய்வும்
கானென்ற கால்முடக்கம் பறங்கிமேகம்
கைகாலிற் கறுப்பு வெள்ளை காதுமந்தம்

ஊனென்ற உடம்பெல்லாம் புள்ளிதேமல்
உள்ளிரணைம் வண்டுகடி யோடுந்தானே. (21)

கெந்தகப் பற்பம்.

ஓடுமடா இன்னுமொன்று உரைப்பேன்கேளு
உற்றகெந்திப் பற்பமதை யுரைக்கப்போமோ
தேடுகின்ற சிறுபீளை யிலையரைத்துச்
சிறுகுகைபோ லுண்டுபண்ணிச் சீலைசெய்து
கூடுகின்ற கெந்தகத்தின் கட்டிமேலே
குருப்பூசி வாய்நீராற் குகைக்குள்வைத்து
மூடுவாய் சில்மூடிச் சீலைசெய்து
மூன்றெருவிற் புடம்போடு மறந்திடாதே. (22)

திடமான கெந்தகத்தின் பற்பந்தன்னைத்
தேனிலே நெல்லிடையாய்க் கொண்டுவா நீ
படபடெனத் திரியாதே பத்தியங்கேள்
பாலுடனே நெய்பாசிப் பயறுமாகும்
அடங்காத புள்ளியுடன் மேகம்வாதம்
அரையாப்பு சிறுசிரங்கு அண்டவாதம்
முடக்குவலி வாதவலி முழங்கால்வாதம்
மொளிமொளிக்குக் கட்டுகிற சூலைபோமே. (23)

சூலைபோம் பதினெட்டுக் குட்டம்போகுஞ்
சொரிசிரங்கு செங்கரப்பான் ரெல்லைவாயும்
காலையே முடக்கிவைக்கும் மேகவாய்வும்
கண்புகைச்சற் கண்சிவப்பு கண்ணீரோட்டம்
மாலையிலே வந்தடுக்குஞ் சயமாங்காசம்
மாரடைத்துக் குத்துகிற வலியுந்தீருந்
தோலையெல்லாங் கருக்கிவைக்கு மேகநீருந்
தொண்டையிலே புண்ணுகு மேகம்போமே, (24)

சலாசத்துப் பற்பம்.

மேகம்போ மின்னுமொரு பற்பங்கேளு
விள்ளுகிறேன் சலாசத்தோர் கட்டிவாங்கி
பாகமென்ன வாய்நீராற் குருவைப்பூசி
பதிவாகச் சுண்ணாம்புச் சீலைசுத்தி

வேகமுள்ள குக்குடமாம் புடத்தைப்போடு
வெந்தாறி நீறியது வெள்ளையாகும்
கூகை நீற் போலவுமே வெள்ளையானாற்
கொடுப்பதற்கு அனுப்பானம் வெந்நீராமே. (25)

வெந்நீரிற் கொண்டவுடன் வினைகள்போச்சு
மிக்கமல சலமடைப்பும் விட்டுப்போச்சு
கண்ணிலே காசநீர்ப் புகைச்சல் போச்சு
காயமடா வச்சிரம்போற் றிரேகமாச்சு
எண்ணியதோர் வாயில்நின்ற ரோகம்போச்சு
ஈளையொடு தொண்டவலி இருமல்போச்சு
விண்ணிலே வெந்ததொரு வாய்வும்போச்சு
மேனியெல்லாம் கற்பூர வாசமாச்சே, (26)

தாளகப்பற்பம்.

ஆச்சப்பா இன்னுமொரு பற்பங்கேளு
அரிதாரம் வெள்ளையடா யார்தான்செய்வார்
போச்சப்பா நாயுருவி சாம்பலாக்கி
பொன்னான அமுதப்பால் விட்டேஆட்டி
மூச்சப்பா குகைபோலச் செய்துகொண்டு
முன்போலக் குருப்பூசிக் குகைக்குள்வைத்து
வீச்சப்பா சீலைசெய்து காய்ந்ததானால்
வெற்றியுள்ள குக்குடத்தில் வெள்ளையாமே. (27)

வெள்ளையென்ற தாளகத்தைப் பணவிடையாய்
மிகத்தேனி லுண்பீரேல் யேழுநாளில்
சள்ளையென்ற சயரோகம் கபாசரத்தஞ்
சங்கிலிபோற் பின்னிவிழுஞ் சிலேற்பனங்கள்
மெள்ளமெள்ள வந்தடிக்கு மீளைகாசம்
மிக்கதொரு உள்மாந்தை மேனிவற்றல்
கள்ளனைப்போல் வந்தடுக்குங் கபரோகங்கள்
காசமெனப் பட்டதெலாங் காணாதென்னே. (28)

காணாது முறைக்காய்ச்ச லீளையாந்தங்
காயாலே பெருவயிறு கண்மயக்கம்

வாணுளை யோட்டிவைக்கும் வலிகுன்மங்கள்
வாந்திபண்ணுஞ் சத்திருன்மம் வயிற்றுநோயும்
ஊணுக வுருக்கிவைக்கு மூள்ரோகங்கள்
உள்மாந்தை வெளிமாந்தை யுமிழ்நீரோட்டம்
வீணுகப் பறந்தோடுந் தாளகத்தால்
மேனியெல்லாந் தங்கநிற மெண்ணலாமே. (29)

வங்கபற்பம்.

எண்ணலாம் வங்கபற்பஞ் சொல்லக்கேளு
யாவருக்குஞ் சொல்லாதே வீண்பேருண்டு
வண்ணமுள்ள வங்கத்தைத் தகடாய்த்தட்டி
வைத்திடுவாய்க் குளிக்கல்லில் வயணமாக
அன்னமுள்ள ஆலம்பால் தன்னிலூறி
ஆறியபின் கட்டியரை மெழுகுமாகும்
வின்னமில்லா வில்லைதட்டிக் காயவைத்து
மேலோடு மூடிநன்றாய்க் காயவையே. (30)

காய்ந்தபின்பு வராகபுடம் போட்டீரானாற்
கருவங்கம நீறியல்லோ வெள்ளையாகுஞ்
சாய்ந்துநீ திரியாதே குருச்சொல்லாதே
தனிப்பசுவின் வெண்ணெய்யிலே தானேகொள்ளு
பாய்ந்துதடா தாதுவெல்லாம் பற்றியேறி
பாசிபற்றுஞ் சூலைமூதற் பறங்கிப்புண்ணுந்
தேய்ந்துதடா வியாதிபோந் திரேகம்பொன்னும்
சீவிமுதல் பிரமியங்கள் ரெத்தம்போமே. (31)

ரத்தம்போம் ரணங்கள்போம் நடுக்கம்போகும்
ரணமில்லாப் பிரமியங்கள் நாசமாகும்
வத்திநின்ற தாதுவெல்லா முறப்பதாகும்
மானியிலே புண்புறைகள் வாங்கிப்போகும்
அத்தியிலே யெலும்புருக்கி அண்டச்சூலை
அடிவயற்றுச் சுருக்குவலி ஆணிப்புத்து
நெத்தியிலே கல்லதுவைத் தாக்கினப்போல்
நிமிஷத்திற் றீருமடா நிசஞ்சொன்னேனே. (32)

நிசமாக மூன்குருவை பறந்துபோனால்
நீருறா பாடுபட்டும் நீசமாகாது
அசைபறவே ஆதியென்ற ஈசன்வித்தை
யாரறிந்து செய்வார்கள் ஆனற்கேளு
குசமசக்காய்ச் சொல்லவில்லை கூர்ந்துபாரு
குளிர்ந்தரசம் பதின்கழஞ்சி கல்வத்திட்டு
இசைநாதம் பெற்றிடுங்கற் பூரவள்ளி
சேர்த்தரைக்க இலைசமனாய்ச் சேர்ந்துபோமே. (33)

இரசபற்பம்.

சேர்த்தரை நீ சாமமிரண் டரைத்துக்கொண்டு
தெள்ளுப்போல் வில்லைதட்டி ரவியிற்போடு
வார்த்ததடா புதுவோட்டில் வைத்துநல்ல
வளையம்போல் ஓலைவைத்து வன்மையாக
நார்த்துடைக்கும் நாயுருவி விதையைக்கொட்டி
நல்மாக மூடி நன்று யெருமேல்வைத்து
சேர்த்துயெரு வடுக்கிக்குக் குடம்போலாகத்
தீயிட்டுப் புடம்போடச் செய்மையாமே. (34)

செம்மையுள்ள பற்பமடா ஆத்தாள்சொன்னாள்
செகத்தோர்க்கு வந்தபிணி தீர்க்கலாங்கேள்
திம்மையெல்லாந் தீருமடா சூதத்தாலே
செய்பாகந் தப்பாமற் செய்துபாரு
நன்மையடா மெத்தவுண்டு வியாதிதீர
நலமான சூதபற்ப மிருந்துதானால்
வன்மையுள வைத்தியர்க ளீசனாவார்
வாய்ச்சூலை கட்டோடே போகுந்தானே. (35)

கட்டான பற்பமிது நல்லபற்பங்
காசினியோர் தங்களுக்குக் கருத்தோணாது
வெட்டலாம் வியாதியெல்லாம் ரசவாளாலே
வேதையுண்டு அறிந்தோர்க்கு மிகவும்லாபம்
பட்டமரம் பால்சொரியு மிதனால்மக்காள்
பகருவேன் வைத்தியங்கள் பார்த்துவா நீ
குட்டம்போங் குன்மம்போங் குறைநோய்போகுங்
குடல்வாதஞ் சூலைவலி குன்மம்போமே. (36)

போமென்ற புண்புரைகள் பொல்லாமேகப்
புத்துகளாய் வெடித்ததெல்லாம் போரும்பாழாய்
ஆமென்ற அண்டத்தில் அரையிற்புத்து
அடங்காத மேகவெட்டை யாணிக்குத்தும்
வாமென்ற வாயுதடு நாவுதொண்டை
மண்டையெல்லாம் புண்ணாகி வலிக்குமேகம்
காமென்ற கைகாலிற் குடைச்சல்வீக்கங்
கருவயிற்றின் கட்டிமுதற் கறைந்துபோமே. (37)

கறைந்துபோம் லிங்கத்திற் புண்புத்தானாற்
கைகாலிற் சூலைமுதற் கண்வீக்கங்கள்
விறையோடே வலிகண்டு அண்டஞ் சேர்ந்து
வீங்கியல்லோ நீரடைத்து மலமுங்கட்டிப்
புறையோடிச் சீவிழுந்து புண்ணுமானால்
பொல்லாத மேகமெல்லாம் போகுஞ்சொன்னேன்
இறையளவுந் தப்பில்லை யிந்தநூலில்
இன்னமொன்று சொல்லுகிறே னினிதாய்ப்பாரே.()

பாரப்பா பண்டிதங்க ளெகுவதாகப்
பார்தனிலே செய்திடலாம் இருநூற்றைந்தில்
சீரப்பா செந்தூரஞ் சுண்ணம் பற்பம்
செய்வதற்கு இக்குருவைச் சேர்த்துக்கொள்ளு
ஆரப்பா வறிவார்கள் குருவின் போக்கு
அறிந்தவர்கள் மனதுக்குள் ளடக்கஞ்செய்வார்
நேரப்பா போக்கறியா வைத்திய ரெல்லாம்
நிலையறியார் குருவந்த வகைகாணாரே. (39)

வந்தவகை யெந்தனுக்கு மார்க்கபேதா
மனோன்மணியாள் கடாச்சத்தால் வந்துதையா
எந்தனுட செயலாலே யொன்றுமில்லை
ஈசனாற் கிடைத்ததிந்தக் கற்பந்தானும்
விந்துவிட்டா லொன்றுமில்லை அய்யா அய்யா
மேதினிற் றனியாக விருந்துபாரு
சிந்தைமகிழ் வாகவே யுனக்குச் சொன்னேன்
சிரஞ்சீவி யாய்த்தவங்கள் செய்குவாயே. (40)

தவஞ்செய்து அகஸ்தியனென்று பேரும்பெற்றேன்
 சடாதார கங்கையுண்டு மோட்சம் பெற்றேன்
நவகோடி சித்தர்களைக் கண்டுகொண்டேன்
 நாதாக்க ளோடுறவா யிருந்துகொண்டேன்
சிவமெனும்ஓம் அச்சரத்தின் முறையுங் கண்டேன்
 சிவனுமையுந் தாய்தகப்ப னென்றறிந்தேன்
உவமானச் சித்தர்கள்வந் தெனையடுத்து
 உயர்கற்பம் பொதிகையினிற் கொண்டிட்டாரே (41)

பொதிகையிலே யெனைப்பார்க்கச் சிவனும்வந்தார்
 பூரணனே தெய்வமென்று போற்றிசெய்து
இதமாகக் கற்பமுறை யாவுங் கேட்டேன்
 எந்தனுக்குக் கற்பமுறை யெடுத்துமேதான்
சதமாக அகாரஉகா ரந்தைச்சொல்லித்
 தானதற்கு மேலாகச் சிகாரஞ்சொல்லி
பதமாக மகாரத்தைச் சொன்னபின்பு
 பாரபரையா ளெடுத்துரைத்த பாகங்கேளே. (42)

எடுத்துரைத்த பாகமதை யென்னசொல்வேன்
 ஏகாந்த மனோன்மணியா ளெதிரேநின்று
துடுக்கான வித்தையெல்லாஞ் சொன்னாளத்தாள்
 சுருதிமுடி யனுபோகச் சூக்ஷஞ்சொன்னாள்
எடுப்பதற்கு வெண்சாறை முதலாமென்றாள்
 இனியகரு நெல்லிசத்தி இரண்டாமென்றாள்
அடுக்கு கைலாசகிரி மூன்றாமென்றாள்
 ஆதிசிறு பசளைகடுக் காயென்றாளே. (43)

கடுக்காயைச் சொல்லியல்லோ தொட்டுக்காட்டி
 கைபாசம் இன்னதென்று கருவுஞ்சொல்லி
முடுக்கான ஐங்காய முறையுஞ் சொல்லி
 மூவருக்கும் பேர்சொல்லி முகூர்த்தந் தொட்டு
எடுப்பதற்கு முறையோடே யிதுதானென்று
 யெண்ணிமனஞ் சலியாம லேங்கிடாமற்
றெடுத்தமுறை தவறாமற் றொட்டுக்காட்டிச்
 சுயமாக யெந்தனுக்குச் சொன்னாள்பாரே. (44)

பாரப்பா அரனுமைக்கு ஒருநாள் தன்னில்
　　பண்பாக அகார உகாரத்தைச்சொல்ல
காரப்பா வல்லாரை கற்பமென்ற
　　காரணத்தைச் சொலவேணு மென்றுகேட்க
சீரப்பா வகையோடே விபரமாகச்
　　செப்பினதைக் கேட்டிருந்து தெளிவதாக
பேரப்பா வல்லாரைக் கற்பங்கொண்டு
　　பேசினே னொருவருக்கும் விண்டிடாதே. (45)

பேசினே னிந்தநூல் நூறுக்குள்ளே
　　பிரபலமாய்ச் செந்தூரம் பற்பமெல்லாம்
வீசினேன் கற்பத்தின் நேர்மையெல்லாம்
　　விதியாளி யானுக்கால் விளையந்தோணும்
தூசிபோற் பறக்குமடா வியாதியெல்லாம்
　　சோலியில்லை செய்தவர்க்குச் சூக்ஷமையா
வேசியர்க ளாசைவிட்டுக் கற்பங்கொள்ளு
　　வேதாந்த மனோன்மணியைப் பூசிப்பாயே. (46)

பூசித்து வந்தாக்கா லெல்லாஞ்சித்தி
　　பொய்சொல்லா தேதாயைப் பூசிப்பாய்நீ
காசிக்கு வழியெங்கே தடந்தானெங்கே
　　கண்புருவ மத்தியிலே காசிவாசி
தேசிக்கு விலாசமப்பா அகண்டவீதி
　　தெருநாலு வீதிக்குள் தேசிமாட்டி
வாசிவசி வசியென்று குதிரையேறி
　　வல்லவனே யானுக்கால் மதிப்பாலுண்ணே. (47)

மதியமுத முண்டாக்கால் காயசித்தி
　　வல்லாரை கொண்டாக்கா லெல்லாஞ்சித்தி
உதவுகின்ற விதுரெண்டு முண்டாயானால்
　　உள்ளபடி கற்பமுறை யுனக்கேகிட்டும்
ததிகாலம் வந்தாக்காற் பார்த்துவாங்கிச்
　　சங்கையிலா தேபுசித்தாற் சித்தனாவாய்
உதயாதி யானுக்கால் மெத்தநன்று
　　உத்தமனே மாலையென்றால் பட்சம்ரெண்டே. (48)

பட்சமென்றால் நல்லதடா பார்த்துவாங்கு
பசளையென்று பேராச்சு பாவிமக்காள்
அச்சமொன்றும் நினையாதே கோரைபோக்கி
அருந்திடுவாய் வாளாலே அறுத்துநல்ல
எச்சான கல்லுரலிற் பசளைபோட்டு
இருப்புலக்கை யதனாலே இடித்துக்கொண்டு
மெச்சுமிந்தப் பானையிலே தோணடும்போது
மேலான வழுரிபடி நாலுவாரே. (49)

நாலுபடி அழுரிவிட்டு அடுப்பிலேற்றி
நலமான பசளைக்குப் பாதிகூடம்
மேலுமதைப் பொடித்ததில் கலக்கிநல்ல
விநாயகர்க்குப் பூசைபண்ணி அனலைமூட்டி
பாலருப்புப் போலாக அனல்மீறாமல்
பத்திரமாய்ப் பிடியாமற் றடுப்பார்க்கின்று
வாலுகையா மடுப்போடே இருக்கும்போது
மளமளென்று கொதியெழும்பி வருமேநெய்யே. ()

வருகிறதைப் பதம்பாரு கருகின்மேலே
வருகுமடா நெய்மிதக்கும் வடித்துவாங்கு
முருகாமற் புஷ்டியெல்லாம் வேறேவாங்கும்
மூளிக்காதே யிரண்டுமொன்றாய்ச் செய்திடாதே
திருவான பூசையது நினைவாய்ச்செய்து
நீங்காத சிவயோக நிஷ்டைகூடும்
பெருவாழ்வு பெறுகுவா யிதையிரண்டும்
பிசகாமற் பீங்கானிற் பதனப்பண்ணே. (51)

பதனம்வெகு பதனமடா சூதானந்தான்
பத்திரமாய் வைத்தபின்பு பாகங்கேளு
விதமென்ன வீரமொடு சாரஞ்சேர்த்தால்
மேலான கற்பமடா விண்கொள்ளாது
அதுவென்ன யிதுவென்ன வென்றுயெண்ணி
அலையாதே மலையாதே ஐயாஐயா
விதியென்ன இதுதாண்டா அறிவாய்நீயும்
வெளிவிடா தேயிருந்தால் வேதையாமே. (52)

ஆமென்ற ரேசகபூ ரகந்தான்பண்ணு
அசையாமற் கும்பகத்தில் நின்றுகொண்டு
தாமென்ற தைலத்தைக் காண்டிவீதம்
சாதகமாய்ப் புஷ்டிநெல்லிக் காயின்வீதம்
ஓமென்ற இருவேளை கொள்வதற்கு
உண்மையுடன் சொல்லுகிறேன் நன்றாய்க்கேளு
காமென்ற காலையிலே தைலமுண்ணு
கடந்தபின்பு மாலையிலே புஷ்டிகொள்ளே. (53)

புஷ்டிதனைக் கொண்டதினாற் பலமுண்டாச்சு
புகழான தைலத்தால் அழகுண்டாச்சு
எட்டிவந்த நரைதிரையு மோடிப்போச்சு
ஏமனென்ற வார்த்தையது மிறந்துபோச்சு
வட்டுப்போல் திரேகமெல்லாஞ் சட்டைவாங்கும்
மனோன்மணிசொல் விதுதானே யார்க்குந்தோணு
மட்டில்லாச் சட்டையது உரிந்துதானால்
வைரமடா உன்திரேகம் வலுத்துப்போச்சே. (54)

போச்சுதே பிரமனிட்ட லபியும்போச்சு
பொன்போலத் திரேகமெல்லா மின்னலாச்சு
வாச்சுதே திரேகசித்தி வாய்த்துப்போச்சு
மரணமொரு நாளுமில்லா மார்க்கமாச்சு
ஆச்சுதே அந்திசந்தி யுண்டதாலே
அச்சாணி கம்பமெலா மிறுகிப்போச்சு
பேச்சொன்று மில்லையடா இனிமேலென்ன
பேரின்பக் கூத்தாச்சு பேணிப்பாரே. (55)

சவ்வீரமெழுகு.

பாரேநீ தைலத்தில் வாதஞ்சொல்வேன்
பார்வதித்தாய் எந்தனுக்குப் பகர்ந்தவித்தை
தாரேநீ சவ்வீரக் கட்டிவாங்கித்
தைலத்திற் தோய்த்தல்லோ ரவியிற் காய்ந்தால்
பேரே நீ புஷ்டிதனைக் கவசஞ் செய்து
பின்னுமந்த மண்சீலை வலுவாய்ச்சுத்தி
மீறாமல் ரவிதனிலே காய்ந்துதானால்
விளக்கிலே வாட்டிடவே மெழுகுமாமே. (56)

ஆமென்ற மெழுகெடுத்துச் சிமிளில்வைத்து
அரனடியைத் தான்றொழுது அன்புகூர்ந்து
தாமென்ற தங்கத்தைத் தகடாய்த்தட்டித்
தனிரேக்குப் பொடிபோலே நறுக்கிவாங்கி
ஏமென்ற இம்மெழுகிற் பத்துக்கொன்று
இப்பொடியைச் சேர்த்துநன்றாய் ரவியிற்போடு
நாமென்ற தங்கத்தை சவ்வீரத்திண்ணும்
நல்லமெழு காயிருக்கும் நன்மைபாரே. (57)

நன்மையுள்ள மெழுகெடுத்து நவலோகத்தில்
நாட்டினால் நாலாறு மாற்றுக்காணுஞ்
சென்மையுடன் கைபாகந் தவறிடாமற்
செய்பாகந் தப்பாமற் செய்துபாரு
வண்மையுள்ள சற்குருவை வணங்கிப்போற்று
மறவாதே தாய்பதத்தை மனதில்வைப்பாய்
உண்மையுள்ள சேதியடா வுரைத்திடாதே
ஒருத்தருக்குஞ் சொல்லாதே வுண்டுதேரே. (58)

உண்டுதே ரொருவருக்கும் பொருள்சொல்லாதே
உலகத்து மாண்பர்கண்டா லுனக்கு மோசம்
தெண்டனிட்டுக் கேட்டாலுஞ் சொல்லிடாதே
தெருத்திண்ணை தனிலிருந்து தினறிடாதே
கண்டுமனந் தெளிந்தபெரி யோர்கள்வந்தால்
கைகுவித்து கற்பமுறை யவரைக்கேளு
மண்டலத்தில் கற்பமுறை சொன்னதெல்லாம்
வாங்கிக்கோ இக்கற்ப மியம்பிடாதே. (59)

இயம்பிநீ நூலிருக்கு தென்றிடாதே
இருக்குதென்று சொல்லாதே இடிதான்வீழும்
அயம்பிநீ அல்லவென்று சொல்வாயானால்
ஆளாக மாட்டாய்நீ நசித்துப்போவாய்
பயமாக நடந்துகொண்டு குருவைப்போற்றி
பகருவது இந்தநூல் பத்தர்க்காகும்
நயம்பெறவே உன்னிடத்தில் சிஷியர்வந்தால்
நல்லபிள்ளை யானக்கால் நடத்தைபாரே. (60)

பார்த்து நீ ஈய்ந்தாக்காற் குற்றமில்லை
    பாவிகள்தான் மெத்தவுண்டு பகர்ந்திடாதே
சேர்த்தாலுங் குற்றமுண்டு தோசியோரைத்
    திருடரென்று அப்பாலே தூரத்தள்ளு
கூத்தாடித் திரியாதே கொலைசெய்யாதே
    கொண்டபெண்ணை விட்டலைந்தாற் கூடாதொன்றும்
சோத்தாலே அலைந்துகெட்டுச் சுணங்களுவாய்
    சுகியான அறுசுவையுங் கிடைத்திடாதே. (61)

கிடையாமல் வெறியெலும்பி அன்னத்தாலே
    கெட்டவர்கள் மெத்தவுண்டு உலகத்துள்ளே
மடையாப்பா அவரிடத்திற் சேர்ந்திடாதே
    வழியோடே யிருக்கவென்றால் வயணங்கேளு
தடையென்ன இல்லத்தி லிருந்துகொண்டு
    சார்ந்திடுநற் சாத்திரங்கள் தரிக்கப்பண்ணி
இடையிலே பரதேசிக் கன்னமிட்டு
    எந்தாயைப் பூசைபண்ணி இருதாள்போற்றே, (62)

இருதாளைப் போற்றியல்லோ இருந்துகொண்டு
    எந்நாளும் பூரணத்தில் மனதைவைத்து
அறிவோடே நீயிருந்து அமுதமுண்டு
    ஆங்கார மாய்கையெல்லா மறுத்துத்தள்ளி
நிருவிகற்ப சமாதியிலே நின்றுதேறி
    நீங்காத சிவயோக நிஷ்டைகூடி
அறிவறிந்து ஆறுவரைக் கப்பாற்சென்று
    ஆனந்தப் பெருங்கடலி னலையில்மூழ்கே. (63)

அலையிலே மூழ்கியல்லோ அறியவேணும்
    அப்பாலே ஆதிகற்பங் கொள்ளவேணுங்
குலையிலே யிருந்தகனி தின்றுதேறி
    கொல்லவந்த எமனையும்நீ யுதைத்துத்தள்ளி
இலையிலே காய்த்தகனி எடுத்துஉண்டு
    இயல்பான கணபதியுங் குருவும்போற்று
மலையிலே நீயிருந்து தவசுபண்ணு
    வருகுமடா மெஞ்ஞான வழி தப்பாதே. (64)

தப்பாமலிப்படியே இருந்தோர்க்கெல்லாஞ்
சகலவித்தை கற்பமெல்லாந் தருவாளாத்தாள்
எப்போதுங் குடியிருப்பா ளிடைவிடாமல்
ஏழையென்று எடுத்தணைப்பாள் இரங்கியல்லோ
செப்பமுள்ள கண்மூடித் தவசில்நின்றால்
சிறப்பாக உன்னைவிட்டு விலகிடாள்பார்
ஒப்பேற்றிக் கொண்டிருக்க யிதுதான்மார்க்கம்
உள்ளபடி சொல்லிவிட்டேன் உலகத்தோர்க்கே. ()

உலகத்தில் ஞானிகட்கு உறுதிசொன்னேன்
ஒப்பில்லை யிந்நூல்தான் நூற்றுக்குள்ளே
பலநூலுஞ் சுருக்கியல்லோ விதனைச்சொன்னேன்
பண்டிதத்துக் காதியா யிருநூற்றைந்து
கலக்கமறச் சொல்லிவிட்டே னிதுபோலாகும்
கலைவாணி யிதையறிந்து சாபந்தீர்த்தால்
மலைக்குகையி லிருந்தசித்த ரிந்தநூலை
வாங்கியே மறைத்துவைத்தார் குகையிற்றானே.(66)

வைத்திருந்த சித்தர்களை அழைத்துக்கண்டு
வாங்கினே னிந்தநூல் நல்லோர்க்கென்று
கைத்திட்ட மானதொரு விந்தநூலைக்
கண்டவர்கள் காட்டார்கள் கருத்தானென்று
ஐத்திட்ட பேர்களுக்கு அறிவுண்டாகும்
அகண்டபரி பூரணியா ளருள்தன்னாலே
சித்திட்ட கற்பமதின் தீர்க்கஞ்சொன்னேன்
திறமாக இன்னமொரு கற்பங்கேளே. (67)

கேளப்பா அகாரத்தின் பூசைதானும்
கிருபையுடன் காலையிலும் மாலைநேரம்
ஆளப்பா பூசைசெய்துக் கொண்டேவந்து
அடைவாக வருடமொன்று சென்றபின்பு
சூளப்பா உகாரத்தின் பூசைதன்னைத்
துடங்கியே ஒருவருட மானபின்பு
நாளப்பா அகாரஉகா ரத்தைச்சேர்த்து
நலியாமல் பூசைசெய்து வருவாய்யென்னே. (68)

என்னவிப் படியாறு வருடங்கொண்டு
இயல்பாகப் பூசைசெய்து வருகும்நாளில்
முன்னமே சொன்னபடி மயக்கமாகும்
முதண்டக் கசாயத்தா லெல்லாம்போகும்
கன்னல்போற் தேகத்தில் சட்டைவாங்கும்
கருத்துடனே அதைக்கடந்து பூசைசெய்யில்
மன்னவன்போ லிருந்திடலாம் பன்னிரண்டு
வருடமது முடிந்தாக்கால் பகிமைபாரே. (69)

பாரப்பா பன்னிரண்டு முடிந்தபின்பு
பருவமது ஒன்ருச்சு பாருபாரு
நேரப்பா மகாரசிகா ரக்கற்பங்கள்
நீநிலத்திற் கொள்ளுதற்கு வகையைக்கேளு
சாரப்பா சுழிமுனையின் நாதவிந்து
தானமுத மாகுமது பூசைசெய்தால்
வீரப்பா அடங்கிவிடு மோரிடத்தில்
வேணுமென மவுனத்தோ டிருந்துதேரே. (70)

தேருவாய் அஷ்டாங்க யோகஞ்செய்து
சிறப்பாக கற்பமது கொண்டுவாநீ
நேருபெற ஒருவருக்குஞ் சொல்லிடாதே
நினைத்ததெல்லாஞ் சாப்பிட்டுக் கெடுத்திடாதே
பாருமொரு பெண்களையும் விரும்பிடாதே
பத்தியுடன் பால்பழங்க ளுண்டுதேரு
சீருபெற பாசிப்பயர் போட்டுப்பொங்கி
செயலடைய அடக்கமா யுண்டுதேறே. (71)

அடக்கமா மின்னமொரு கற்பங்கேளு
ஆயிசொன்ன படியுரைத்தே னறிந்துபாரு
விடக்கெடுத்த நாய்போலத் திரிந்திடாதே
வீணர்களைச் சேராதே வீண்பேசாதே
கடக்கரையில் நின்றவரைக் கைகாட்டாதே
கர்மத்தை நினையாதே கள்ளுண்ணாதே
படுக்கையிலு மிருக்கையிலும் யோகம்பாரு
பராபரத்தைப் பார்த்தவர்க்குப் பலிக்குந்தானே. (72)

மூலிகைக் கற்பம்.

பலிக்குமென்று என்தாயார் சொன்னகற்பம்
பாடினேன் தன்னுக்குள் பாகத்தோடே
கலிக்குமென்ற ஆவரையின் பட்டையோடு
கனகமென்ற சிவன்வேம்பு வேங்கைப்பட்டை
சலிக்குமோ ஆகியந்தக் கருவுங்கூட்டிச்
சமமாகப் பாண்டத்தி லொன்றாய்ப் போட்டு
விலக்கமில்லா தேமுடிச் சீலைசெய்து
மீறாமற் குளித்தைல மிறக்கிடாயே. (73)

இறக்கினதோர் தைலத்தைப் பதனம்பண்ணி
யென்தாயைப் பூசித்து இருதாள் போற்றி
அறக்குமணி மாளிகையாந் தைலமப்பா
அன்புடனே ஷண்முகர்க்குப் பூசைபண்ணி
நிறக்குடனே பணவிடைதா னெடுத்துக் கொண்டால்
நீங்காத வியாதியெல்லாம் நிவர்த்தியாகும்
நரைக்குலமாய் வந்ததெல்லா மோடிப்போகும்
நாடிநரம் புள்ளதெல்லாம் வலுத்துப்போச்சே. (74)

தைல கற்பம்.

வலுவான தைலத்திற் கற்பஞ்சொல்வேன்
மண்டலமே பணவிடைதான் கொண்டாயானால்
சலியாது சட்டையொன்று தேகந்தன்னில்
தள்ளுமடா வெளுப்பாகத் தானேபோகும்
மெலியாது தேகமப்பா கெட்டியாச்சு
மின்னலுமே சூரியன்போல் வீசும்பாரு
மலைமேலே யிருந்தசித்தர் வாவாவென்பார்
மகத்தான தைலத்தின் வழிசொல்வாரே. (75)

வழிசொல்வார் மண்டலமே கொண்டாயானால்
வயிரம்போற் றேகமப்பா வலுத்துப்போச்சு
அழியாத தேகமதைப் படைத்துக் கொண்டால்
ஆண்பிள்ளை சித்தனென்று பேருங்கொள்வாய்
தெளிவாகத் திரேகசித்தி செய்துகொண்டால்
சிறுபிள்ளை யாயிருந்துத் திறமுங்காண்பாய்
சுழிவாக ரசங்கட்டும் சரக்குங்கட்டும்
சொன்னசரக் கறுபதுக்குஞ் சூட்டிப்பாரே. (76)

கூட்டி நீ சுருக்கிடவே கட்டிப்போகும்
சுண்ணமா மெழுகுமாஞ் சோலியில்லை
கூட்டி நீ முடிப்பதற் குபாயம்வேணும்
குருவுடைய கடாக்ஷத்தாற் குருவுமாகும்
நாட்டிலே யின்னமொரு கற்பஞ் சொல்வேன்
நல்லசுண்ண முப்பூவை நவிலக்கேளு
வீட்டிலே யிருக்குமடா அந்தமூலி
விளையுமடா காயோடே விரையில்லாதே. (77)

முப்பூவின் முறை.

இல்லாத மூலியொன்று எண்ணிடாதே
எந்தெந்த இடங்களெல்லா மிருக்கும்பாரு
நில்லாத நிழல்சேர்ந்த தண்ணீரோரம்
நிழலருகே மூளைத்திருக்கும் மூன்றுமூலி
வல்லமையா யதிலிருந்து வாசி தேவர்
வாசிவா சிவாயென்று தவஞ்செய்வார்கள்
சொல்லடா தவசுநிறை வேறிற்றானல்
சுழியைவிட்டு வெளியேறித் துலங்குவாரே. (78)

வாரான தவசுவிட்டு வாசுதேவர்
வந்தவுடன் செடிமூன்றும் வாடிநிற்கும்
ஊராரைக் காணும லொவ்வொன்றாக
ஒருமிக்க மூன்றையுந்தான் பிடுங்கும்போது
சீறிவிழுஞ் செடியப்போ தியங்கிடாதே
சிவந்திருக்கு மூலிகைதான் செடிதானல்ல
ஆரறிவா ரிம்மூலி யறிந்தோர் காண்பார்
அல்லவடா வாசானை யடுத்துக்கேளே. (79)

அடுத்தல்லோ மூலிகைதா னறிவதற்கு
யாருக்குந் தோணாது அதீதயப்பா
எடுத்தல்லோ யிம்மூலி மூன்றுதன்னை
இளசாகச் சிறுத்தறிந்து எடுத்துக்கொண்டு
வடுவில்லாச் சட்டியிலே மூலிதன்னை
வைத்தபின்பு தைவேளைச் சாறுவிட்டு
எடுத்தல்லோ அடுப்பேற்றி யிளந் தியாக
எள்ளளவு பொங்காம லெரித்திடாயே. (80)

எரித்துநீர் வற்றியே குறுகினுக்கா
 லென்னசொல்வேன் சுண்ணமா யிருக்கும்பாரு
தரித்திரம்போஞ் சுண்ணத்தைக் கண்டபோதே
 சகலசரக் கறுபத்து நாலும் நீறும்
அரிக்கிமுத லெழுத்தப்பா யிந்தமூலி
 அரியானு மயனானுங் காணப்போமோ
விரித்துவிட்டே னிந்தநூல் நூறுக்குள்ளே
 மேலான சுண்ணமடா விண்கொள்ளாதே. (81)

விண்கொள்ளாச் சுண்ணத்தை யென்னசொல்வேன்
 வியாதியென்றாற் கடுகளவு கொடுத்துப்பாரு
மண்ணுவிண்ணுங் கொள்ளாது மார்க்கமெத்த
 மகாமேரு கைலாச வரையுந் தாண்டும்
எண்ணமுள்ள சிவயோகம் பார்க்கும்போது
 எள்ளளவு நாவுமே லிட்டுப்பாரு
தண்ணீரு பெருகியல்லோ கடல்போலாச்சு
 தாகமென்ற பசிபோச்சு தன்மையாச்சே. (82)

ஆச்சென்று யிப்படியே யோகம்பார்த்தால்
 அழியாது காயமப்பா வாசியாலே
மூச்செங்கு மோடாது மூன்பின்னுகும்
 மூதண்ட வரைக்குள்ளே வடங்கியாடும்
பேச்சேது கற்பமுண்டால் திரேகந்தானும்
 பிலத்துதடா நரைதிரையு மோடிப்போகும்
வாச்சுதே யிந்தமுறை யறிந்துசெய்தால்
 வாதமுண்டு கண்டுகொள்வான் வளமையோடே. ()

வளவான சுண்ணத்தை வாய்நீர்விட்டு
 மத்தித்து ஆதியந்த வுப்புங்கூட்டி
இளகாமல் ஐங்கோலத் தைலஞ்சேர்த்து
 எட்டிலொன்று வீரமுடன் சாரஞ்சேர்த்து
பழகினதோர் சிமிள்தனிலே பதனம்பண்ணி
 பார்வதிக்கும் வடுகனுக்கும் பூசைபண்ணு
களங்கமில்லாத் தங்கத்தைப் பொடியாய்ச்செய்து
 கண்டயிடை பாதிக்குக் கருவைச்சேரே. (84)

சேர்த்தல்லோ வொன்ருகத் திரட்டிக்கொண்டு
சிவகாமி பூசையது திறமாய்ச்செய்து
பார்த்தல்லோ ரவிமுகத்தில் வைத்தாயானல்
பரிரோக்குத் தகடுருக்கித் தின்னுஞ்சுண்ணம்
கோர்த்தல்லோ வொன்ருக்கி இருப்புக்குச்சி
கொண்டுகிண்டிச் சிமிழ்தனிலே பதனம்பண்ணு
ஆர்த்தல்லோ சுண்ணமதை நெல்லிடைதான்
அருந்திஞல் தேகம்பொன் ஞகுந்தானே. (85)

ஆகுமென்று யெனக்குரைத்தா ளாத்தாள்தானும்
அதின்படியே செய்துநா னுண்டுபார்த்தேன்
பாகுபத மானதொரு சுண்ணத்தாலே
பட்டவிடந் தொட்டவிடம் வேதைகோடி
ஏகுமென்ற செம்புவெள்ளி யுருக்கும்போது
எள்ளளவு விராகனுக்கு எடுத்துநீட்டு
சோகிதமா யுருக்கவல்லோ மாத்தேழாச்சு
சொல்லாதே இம்முறையைச் சொல்லொண்ணுதே.

ஒண்ணுன பொருளப்பா ஆதியந்தம்
ஒருவருக்குந் தெரியாது கண்டுதேரு
பண்ணுர்க ளுலகத்தோர் பாகந்தப்பிப்
பதறியல்லோ சுட்டலைந்து பாவியாஞர்
மண்ணும்விண்ணு மதியார்கள் மார்க்கங்காஞர்
வாதமது லேசாமோ வாய்ப்பேச்சாமோ
கண்ணிமைக்கு முன்ஞக விதியுண்டாஞல்
காணலாம் கற்பமது கண்டால்தானே. (87)

கண்டோர்கள் பெரியோர்கள் கருச்சொல்லார்கள்
காத்திருந்து மனதுவா நடந்துகொண்டால்
தொண்டனென்று அவரறிந்தால் சொல்லுவார்கள்
சுருதிமுடி யனுபோகஞ் சொல்லக்கேளு
மண்டலத்தோர்க் கின்னமொரு தயிலஞ்சொல்வேன்
மருத்துவங்கள் மெத்தவுண்டு வைத்துப்பாரு
எண்டிசைக்குத் தாயான கெந்திபூரம்
இனியநவச் சாரமுட னிதுமூன்ருமே. (88)

இதுமூன்றுங் கல்வத்தி லிடித்துக்கொண்டு
எடுத்துவைப்பா யளவான பானைதன்னில்
சதுராக அமர்த்திநன்றாய்ச் சட்டிமூடி
சந்துவாய் தெரியாமற் சேலைசெய்து
விதியோடே குளித்தயில மிறக்கிவாங்கி
மேன்மையுடன் குப்பையிலே பதனம்பண்ணு
மதியோடே பணவிடைதான் கொண்டாயானால்
வயிரமடா உன்தேகம் வலுத்துப் போச்சே. (89)

வலுத்துதே காயமது மறலிபோனான்
மண்டலத்தில் சட்டையொன்று வாங்கும்பாரு
அலுத்துநீ யிருக்காதே யோகம்பாரு
அடிமுடியும் நடுவணையும் மறிந்தேலூது
பெலத்துதே காயமது பெலமுண்டாச்சு
பின்னுமுன்னும் பாராதே பிசகிடாதே
விலத்துவருந் தயிலத்தி லின்னஞ் சொல்வேன்
வீரமுடன் காரபூ ரங்கள்தானே. (90)

தானென்ற ரசமுடனே சமனாய்ச்சேர்த்துத்
தைலத்தை விட்டாட்டி வளித்துக்கொண்டு
வானென்ற வங்கத்திற் பூசிநன்றாய்
மனதறிந்து புடம்போடு வங்கத்தன்னை
கோனென்ற வங்கமடா தங்கமாச்சு
குருபதத்தைப் போற்றியல்லோ சரணஞ்செய்து
தேனென்ற சிவயோகத் தடியில்நின்று
சிவன்பாதம் பூசித்துத் தேருவாயே. (91)

மருதாணித்தயிலம்.

தேருதற்கு இன்னமொரு தயிலஞ்சொல்வேன்
சிவமான மருதாணி சமூலம்வாங்கி
மாருவேன் வாசமுள்ள வெட்டிவேரும்
மகிமையுள்ள ஆதியந்தக் கருவுங்கூட்டி
பாருநீ சமனிடித்துப் பாண்டத்திட்டுப்
பார்வதியைத் தியானித்துப் பாகத்தோடே
வாருகேள் குளித்தயில முன்போல்வாங்கி
மாதாவைப் பூசித்து வைத்துக் கொள்ளே. (92)

வைத்திருந்த தயிலத்தின் மார்க்கங்கேளு
வலுவான தாரமுடன் கெவுரிவெள்ளை
ஐத்துநீ போகாதே துரிசுசூதம்
ஐந்துமே யோர்நிறையா யளவாய்த்தூக்கி
நைத்துநீ கல்வத்தி லிட்டுக்கொண்டு
நன்மையுள்ள தைலத்தை விட்டுஆட்டி
சித்தறிய மெழுகதனைச் சிமிழில்வைத்துச்
சிவகாமி தன்பதத்தைத் தியானிப்பாயே. (93)

தியானித்து மெழுகதனைச் செம்பிற்பூசித்
தீர்க்கமாய்ப் புடம்போடச் சிவந்துபோகும்
தயவான வெள்ளிதனிற் தடவிப்போடத்
தங்கமடா நல்லதங்கஞ் சரிமாத்தாகும்
வயணமாய்ச் சரக்குகளில் தடவிவாட்ட
மணிபோலக் கட்டியல்லோ யிருகிப்போகும்
மயமான ருத்திரனை வணங்கிக்கொண்டால்
வருகுமடா இதுகளெல்லாம் வழிதப்பாதே. (94)

வழியாக இன்னமொரு உப்புக்கட்டு
வயித்தியத்திற் காகும்பின் வசியமாகும்
அழியாதே வெடியுப்புக் கல்லுப்போடே
அடர்ந்தகரி யுப்புடனே வளையலுப்பும்
குளியான சவுக்கார உப்போடைந்தும்
கூட்டியரை பழச்சாறு குழறவிட்டு
வழியாக வரைத்துருட்டி வட்டுப்பண்ணி
மனதார ரவிதனிலே காயப்போடே. (95)

போட்டெடுத்துப் புத்தோட்டில் வைத்துமூடி
புத்துமண்ணால் சேலைசெய்து புடத்தில்போட்டு
தேட்டமென்ன புடமாறி யெடுத்துப்பாரு
சிவமான உப்பைந்துங் கருகிநிற்கும்
ஆட்டமென்ன கருகினதோர் உப்பினோடே
ஆனதொரு காரமுடன் சாரஞ்சேர்த்து
வாட்டமில்லாப் பழச்சாறு விட்டேயரட்டி
மைந்தனே வில்லைதட்டிக் காயப்போடே. (96)

காய்ந்துதென்றால் ஓட்டில்வைத்து ஓடுமூடிக்
கனமான சேலைசெய்து ரவியிற்போட்டு
சாய்ந்ததிறு புடம்போட்டு யெடுத்துப்பாரு
தான்முருகிக் கரிபோலே யிருக்குமப்பா
பாய்ந்துமே முன்னெடுத்த கரியுஞ்சேர்த்துப்
பாகமாய்க் கல்வத்தி லாட்டிக்கொண்டு
வாய்ந்துமே இளகியல்லோ மைபோலாகும்
வழித்தெடுத்தே சிமிழில்வைத்து வலிமைபாரே.(97)

பாரே நீ பக்கவா தந்தனக்குப்
பக்குவமாய் தடவிவிட வாதம்போகும்
நேரேதா னிந்தமையைத் திலதம் போட
நின்றவர்க்குக் கண் ணுக்குத் தோணுதப்பா
ஆரேதா னிந்தஉப்பை யறிந்துசெய்வார்
ஆச்சரியங் கண் ணுக்கு மெத்தவுண்டு
கூரேதான் கருவதுவுந் தெரியமாட்டார்
குருவினாற் செய்துகொண்டு நோக்கிப்பாரே. (98)

நோக்கியிந்த மையாலே வியாதிசித்தி
நூதனமென் றெண்ணாதே செய்ததப்பா
வாக்கியங்க ளொருநாளுந் தப்பிடாது
மண்டலத்தி லுள்ளதெல்லாம் வசியமாகும்
தாக்கியதோர் மையதனை அரவத்திற்குத்
தான்காட்டத் தலைதூக்கா நின்றேபோகும்
பாக்கியங்கள் மெத்தவுண்டு பண்ணிப்பாரு
பக்குவமாய் முடிந்துவிட்டா லெல்லாமாமே. (99)

எல்லாந்தா னுகுமனே மணியாள்தீட்சை
இருநேரம் விடாமலே செய்துவந்தால்
பொல்லாங்கு ஒன்றுமில்லை இருநூற்றைந்தின்
பூரணத்தில் சகலவைத் தியமுஞ்சொன்னேன்
கல்லார்க்கு மருந்தேது கற்பமேது
கைமுறைகள் தெரிந்ததுபோல் பேசுவார்கள்
நல்லோர்க ளிதன்பொருளை யறிந்துகொண்டு
நாட்டிலே கற்பமுறை செய்வார் பாரே. (100)

கற்பமுறை செய்வதற்கு நாட்டைவிட்டுக்
    கடக்காதே யூரருகே யிருந்துகொண்டு
உற்பனமா யொருவருக்குஞ் சொல்லிடாதே
    ஊராரோ ருடனுண்மை பேசிடாதே
அற்பமென்று நினையாதே வெளிவிடாதே
    ஆயிசொன்ன படியேநீ உன்னுக்குள்ளே
விற்பனமாய்ச் செய்துதினம் பூசித்தாக்கால்
    மேலான பதவிபெற்று வாழ்வாய் நீயே. (101)

நீயிருந்து கற்பமுறை முடிக்கவேண்டும்
    நேராக நீபூசை செய்யவேண்டும்
ஆயிசொன்ன படிகற்பந் தேடவேண்டும்
    அலையாம லிருந்திடத்தில் நடத்தவேண்டும்
தாயிடத்தி லமுதமது கொள்ளவேணும்
    சற்குருவை யின்னாரென் றறியவேணும்
நேயமுட னிவையாவுந் தெரிந்துசெய்தால்
    நிட்சயமா யிவன்ரிஷிக ளாவான் பாரே. (102)

பாரேதா னனேகநூல் சாஸ்திரங்கள்
    பரிவாகச் சொன்னநூல் தனக்குத்தானும்
காரேதான் கற்பமுப்புங் குரு நூலாகும்
    கருவறிந்து செய்வதற்கு யிந்நூலாகும்
நேரேதான் பார்த்தறிந்து கொள்வாரானல்
    நேர்மையுடன் சடலமது பெலத்துப்போகும்
சீரேதா னின்னூலின் பொருள்கள்தன்னைச்
    செப்பாதே சித்தனா யிருப்பாய்முற்றே. (103)

அகத்தியர் கற்பமுப்புக் குருநூல் 100.

முற்றிற்று.

---

மதுரை யானைக்கல் தெரு வித்துவானும் சகல சாஸ்திர நிபுணருமான மு. குழந்தைவேலுப்பிள்ளை யவர்கள் ஓலையேட்டுப் பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ

பரமபதி துணை.

# முக்கிய கவனிப்பு.

இதில் அகார உகார மகார சிகார கற்பங்கள் சாப்பிடுமுறையும், மூப்பூ முடிக்கவேண்டிய விதிகளும் குருமுடிக்க வேண்டிய பக்குவங்கள் யாவுஞ் சொல்லியிருந்தாலும்; அகார உகார கற்பங்கள் மட்டும் சாப்பிடு முறைகளை விரித்துரைக்கவில்லை ஏனென்றால் புலஸ்தியர் கற்பம் 300-ரில் விரித்துரைத்ததால் இதில் விரித்துக்கூறவில்லை அகார உகார கற்பந்தெரிந்து கொள்ள வேண்டுமானால் புலஸ்தியர் கற்பம் 300-ரில் தெளிவாய்க் கூறியிருக்கிறது பார்த்துக் கொள்ளவும்.

இதற்கு தீட்சைவிதி முக்கியந் தெரிந்துகொள்ள வேண்டும் அதற்காக மனோன்மணி தீட்சை 100 இதில் சேர்ந்திருக்கிறது பார்த்துக் கொள்ளவேண்டியது.

தெட்சணாமூர்த்தி மனோன்மணி தீட்சை

என்னும்

# அகத்தியர்கற்பதீட்சை ௱.

காப்பு வெண்பா.

ஆடுமணி ஞானமது ஆராய்ந் தொருநூறுந்
தேடுமிது தீட்சை திடங்கொண்டு—வீடுமென
நாதவிந்தைச் சத்திசிவ நாடுமித்தை வாசிசித்தர்
மாதவத்தை வைக்கு மனம்.

தீட்சை நூல்.

அருளான தீட்சைபத்தும் நூறுக்குள்ளே
அடக்கியே ஆனந்த சிவத்தைப் போற்றி
இருளான மாயைதனை இட்டகற்றி
ஏகாந்த வாலையிரு பதத்தினாலே
பொருளான பூரணத்தி லுதவஞ்செய்து
பூரையென்ற ஞானவெளி யெங்குமாச்சு
தெருளான மனோன்மணியைப் பூசைசெய்து
செப்புகிறேன் தீட்சைபத்துந் தேர்ந்துகொள்ளே (1)

கொள்ளவே குருவான தீட்சைதன்னைக்
கூறுர்கள் நாதாக்கள் திறந்துதானும்
விள்ளவே மிஞ்சிடுவா ரென்றுசொல்லி
வேறொன்றைச் சொல்லியே மறைத்துப்போட்டு
பிள்ளைகட்கு மின்னமொன்றைச் சொல்லிவிட்டார்
பேரான அகாரமதை மறைத்துப்பாடித்
தள்ளவே தீட்சைபத்து மறிவாரென்று
சாற்றினா ரஞ்செழுத்தைச் சார்ந்துபாரே. (2)

பாரப்பா அஞ்சாலே அஞ்சுமாச்சு
பார்க்கவே பரைக்குமிது பரிவாய்க்காணும்
நேரப்பா தேருநடா அஞ்சுஅஞ்சு
நிலைத்துநடா மவுனமொடு மிருபத்தொன்றுஞ்
சேரப்பா சிவதீட்சை பத்தேயாச்சு
திருசத்தி தீட்சைபதி ஞென்றதாகும்
ஆரப்பா தீட்சைகண்டு உரைத்தபேர்கள்
அரகரா அகண்டமென்று வாமிதானே. (3)

வாலை பூசை.

வாமியெனும் வாலைதனைப் பூசைசெய்ய
மகத்தான சித்தரெல்லா மறைத்துச் சொன்னார்
காமியெனுங் காரணிதன் பூசைமார்க்கம்
கடவுள்பரஞ் சோதியெனக் குபதேசித்தார்
பூமியெனும் பூரணியே ஆதிசத்தி
புவனையடா வாலைதிரி புரையுமாச்சு
நாமியெனும் நாமமிது மூன்றுபேரும்
நடம்புரியப் பூசைதனை நாட்டுவேனே. (4)

நாட்டுதற்குப் பத்மினியே முதலேயாகும்
நன்மைபெருஞ் சித்தினியோ மிரண்டதாகும்
தீட்டுதற்கு அத்தினிதான் மூன்றேயாகும்
திரிபுரையும் புவனையொடு வாலைசோதி
காட்டுதற்குச் சங்கினியோ மவுனவீதி
கண்டவர்க்கு அஷ்டசித்தி குளிகையெய்தும்
பூட்டுதற்கு முதற்பூசை வாலைவாலை
புகழ்பெறவே பத்மினியாய்ச் சனிகையென்னே. (5)

மனோன்மணி யபிஷேகம்.

என்னப்பா பத்மினிதான் சொரூபங்கேளு
இயம்பினர் கொங்கணர்தன் நடுக்காண்டத்தில்
பொன்னப்பா பொற்சிலைபோல் வாலைதன்னைப்
புகழ்பெறவே தான்சேர்த்து மாதாவென்று
உன்னப்பா களங்கமற்ற மனங்கல்லாகி
உறுதியென்று அறிவாலே உறுதியாக்கி
மின்னப்பா மின்னனையாத் தாயுமாவாள்
விளங்கவே நீராட்டிக் கதம்பஞ்சாத்தே. (6)

கதம்ப கஸ்தூரி பூசுதல்.

கதம்பமொடு களபகஸ் தூரிதன்னைக்
கஞ்சமல ரடிதொடுத்துத் தேகமெங்கும்
இதம்பெறவே பூசிடுபொன் சரிகைச்சல்லா
இடைசுத்தி யுடையுடுத்திக் கொலுவும்வைத்து
பதம்பெறவே தெரியாது துயிலின்நேர்மை
பாரோர்க்குத் தெரியாது உனக்குத்தோணும்
மதம்போக்கி மணியாக்கிச் சித்தரெல்லாம்
மனோன்மணிக்கு முடிவகுத்துச் சீவிவாங்கே. (7)

மனோன்மணிக்கு அலங்கிருதஞ் செய்தல்.

வாங்கியல்லோ வகுப்பெடுத்துச் சந்திரன்போல்
வட்டமிட்ட கொண்டையின்மேற் குப்பிசேர்த்துப்
பாங்குநெற்றிச் சுட்டிதிரு வுரையுங்கட்டிப்
பட்டமெனும் வாலைபட்டம் நுதலிற்கட்டி
ஓங்குசெவி தனக்குநிதிக் கொப்புமிட்டு
ஒளிவுபெருந் தாளமணி தொங்கவிட்டு
பூங்குமிழில் நவரத்தினத் தளுக்குமிட்டுப்
பொன்னோலை காதுதனில் பூட்டுவாயே. (8)

வாலைக்குத் திலதமிடல்.

பூட்டிடமுன் நெற்றியில்வெண் ணீறுமூன்றும்
பிறைபோலே பூசியதின் மேலேகேளு
தீட்டியதோர் வயித்திமுந் நூறுக்குள்ளே
செப்பும்பூ ரணச்சந்தி ரோதயந்தான்
நாட்டமுடன் பச்சையிலே யுரைத்துநன்றாய்
நடுநுதலிற் செந்தூரப் பொட்டுமிட்டுக்
கூட்டமிடு நிலைகாட்டி நந்திகாட்டிக்
குருவான நந்தியொளி கூறச்சொல்லே. (9)

நந்தியொளி காட்டுதல்.

சொல்லவே நிலைகாட்டு மனோன்மணியே அம்மா
துரைச்சியும்நீ துரையும்நீ துணிந்தாலெல்லாம்
அல்லம்மா பகலாகும் பகலிரவுமாகும்
ஆதியென்று மனாதியென்று மானபிள்ளை

கல்லப்பா உலைமெழுகு உனக்குநேரோ
காரணியும் காரணனும் நீதானென்று
நல்லப்பா சரம்போலே நோக்கஞ்சொல்லி
நலமாக எட்டிரண்டும் விள்ளுவாயே. (10)

விள்ளுவா யுறுதியென்றுற் கெட்டியாக்கும்
மெய்ஞ்ஞான நந்தியொளி வீசக்கண்டால்
தள்ளுவாய் பிரமனுட லபிபோய்மாயை
தகர்ந்ததடா சரியையொடு கிரியையோகம்
கொள்ளுவாய் பானம்நிறைந் திருக்கலட்சியம்
கூறுன சமாதியுட குளிகைகாணும்
அள்ளுவா யைந்தான ஆதிதன்னை
அரகாா கந்தரத்தின் பணியைக்கேளே. (11)

மனோன்மணிக்கு ஆபரணமிடுதல்.

கேளப்பா தங்கத்தின் பொட்டுக்கட்டு
கெடியான நவரத்தின மாலைபூட்டு
நீளப்பா பதக்கமொடு சரங்கள்போட்டு
நிதியான அட்டிமேற் சவடிபோட்டு
வாளப்பா இரண்டுக்கும் நடுவேயப்பா
மணிகளைத்தான் வகைவகையாய்ப் பூட்டுபூட்டு
ஆளப்பா நவசித்தர் பாபந்தீர்க்க
ஆகுநவ மணிபோலே ஆகும்பின்னே. (12)

மின்னணை தன் கைதனக்குத் தோளுவந்தி
விளங்கவதன் கீழுடுக்கப் பொன்தாயித்து
தன்னதுவுந் தான்போட்டு முன்கைதன்னில்
தளதளென நவரத்தின வளையல்போட்டு
நன்னயஞ்சேர் பொற்கடயங் கெவுனகுண்டு
நலம்பெறவே கட்டியபின் கைவிரற்கு
தென்னிலங்கு மோதிரங்க ளிட்டுநன்றாய்த்
தேன்மொழியா ளிடையிலொட்டியாணங்கட்டே. ()

கட்டுநீ யந்தமுடன் தங்கரைஞான்
கலங்காம விடுப்பிலே கட்டிப்பாரு
இட்டமுடன் வீரியத்தைப் பேசொண்ணாது
யேகாந்தச் சூதமணி தேராய்க்கட்டு

திட்டமுடன் தாளடிக்குப் பஞ்சமுத்திச்
செம்பொன் விரலுக்குமெட்டி பீலியிட்டு
வட்டமிட்ட பாதசரஞ் சிலம்புதண்டை
வாகாக ஆடகபா டகமும்பூட்டே. (14)

ஆசனவிதி.

ஆடகத்தா ளாத்தாளை அலங்கரித்து
ஆடிவருந் தோகைமயில் தனைப்போல்மின்னை
நீடகமாந் தீட்சைவிதி யிருநூற்றுள்ளே
நிலையான பலகைசொன்னேன் மெத்தைசொன்னேன்
வீடகமாங் கொங்கணர்சொற் கடைக்காண்டத்தில்
விளக்கினர் பூசைமடம் வீணாய்ச்செய்ய
கூடகமா மதுக்குள்ளே பலகைமீதில்
கோகிலமாம் வாலைதனை யெடுத்துவையே. (15)

மனோன்மணியைக் கொலுவில் வைத்தல்.

வையப்பா மனதொன்று வாக்கதொன்று
மற்றொன்றும் நினையாதே மாண்டுபோவாய்
மெய்யப்பா முக்காலுஞ் சொன்னேன்சொன்னேன்
விமலர்செய்த பூசையிது விளம்பொண்ணாது
பையப்பா செய்துதிடப் பட்டேன்யானின்று
பாரிலுள்ளோ ரிதைப்பார்த்துக் கெட்டோர்கோடி
நொய்யப்பா அரிசிகொதி பொருக்குமோசொல்
நூல்பார்க்கில் மாள்பிணந்தா னேதுக்காமோ. (16)

ஆமென்று மல்லவென்று மிருப்போர்க்கெல்லாம்
ஆத்தாளைப் பூசைசெய்ய அறியப்போமோ
தாமென்ற புலத்தியனே யுனக்குச்சொன்னேன்
நாதாக்க ளிப்படித்தான் சொல்வார் சொல்வார்
காமென்ற காமியுட கமலவாணி
கதலியிளந் தண்டருகே யிருந்தசெந்தேன்
ஓமென்ற மந்திரத்தா லுண்ணவேணும்
ஓங்காரக் குண்டலியை யுற்றுக்கேளே. (17)

கேளடா கைக்கரணத் தாலேதாயைக்
கெடியான தாமரைப்பூ யிதழை நீக்கி
நீளடா கதலிரெண்டு முன்னே நிற்க
நேரான யிதட்பானந் தன்னையூட்டு
ஆளடா கலசகும்பப் பூசைபண்ணு
அதன்பிறகு சக்கரத்தின் பூஜைபூஜை
கோளடா வெண்ணாதே புலத்தியா நீ
கூறுகிறேன் வாலைதோத் திரத்தைக்காணே. (18)

மனோன்மணியைப் பூஜைசெய்தல்.

காணமுதே வனமயிலே அனமேமோகக்
கண்ணியரே மின்னரசே கலைகட்கெல்லாம்
ஊனுயிரே அருள்நிலமே வடிசெந்தேனே
உற்றசிவ மந்திரமே உலகமெங்கும்
பூரணசே பூண்டவளே அமுதகும்பம்
புடைத்தெழுந்த காரிகையே பொன்னேமின்னே
ஆணரசே பெண்ணரசே யென்னையீன்ற
அம்பிகையே உன்பதமே என்றுபத்தே. (19)

பத்தான தீட்சைபத்தும் நாதவிந்து
பராபரையே மனோன்மணியே மயேசுரத்தி
சித்தான ருத்திரியே திருவேவாலை
சிவசிவா சிவகன்னி சிவத்தில்வித்தே
உத்தான பாக்கியமே தவமேதானே
ஓங்காரி ரீங்காரி ஆங்காரசத்தி
மூத்தான பரஞ்சோதி யென்றுயெண்ணி
மூலவருள் மந்திரத்தை யுரைத்துப்போற்றே. (20)

போற்றியே பணிந்தெழுந்து கடிகடத்தில்
புரியட்ட மந்திரத்தால் மணியைச்சுற்றி
வாழ்த்தியே அஞ்சுமலர்த் தீட்சையாலே
மயங்காமல் மூன்றிதழாற் சுற்றுமிட்டு
ஆத்தியே கரிகரங்கள் யாவுஞ்செய்து
அதன்பிறகு நாற்பத்தி முக்கோணத்தில்
சேர்த்திடுவாய் சிதம்பரத்தை நடுவேவைத்துத்
திடமான பூசையிது செய்யலாமே. (21)

வாலைக்குத் தீபதூபங் கொடுத்தல்.

ஆமப்பா தூபமொடு தீபங்காட்டி
அசவைபெரு மணியோசை சங்கமூதி
தாமப்பா சேகண்டி நாதமோடு
தடையறவே பூசையெல்லாஞ் சார்ந்துதானுல்
நாமப்பா சொன்னபடி யுனக்குச் சொன்னேன்
நாட்டிலுள்ள மானிடர்க ளித்தைவிட்டு
வாமப்பா பூசையென்று பெண்கள்தன்னை
மருவிடுவா ருலகமெனு மடையர்தானே. (22)

மடையரெனு மானிடர்க்குத் தீட்சையேது
மாதாவைப் பூசைசெய்ய மனந்தானேது
கடையரெனுங் கள்ளருக்கு வாதமேது
காரணமாங் குருபாத கடாட்சமேது
உடையரெனும் வழலையுப்பை யறிவதேது
ஓங்காரக் குண்டலிதா னுறுதியேது
விடையமெனுஞ் சாபமதில் வீழ்ந்தலைந்து
மேதினியோர் மாயைதனில் வீழ்ந்தவாறே. (23)

வாறான தீட்சையுட கருவுஞ்சொன்னேன்
மாசற்ற பூசைசெய்த மகிமைசொன்னேன்
வேறான ஆகாச மூலஞ்சொன்னேன்
மெஞ்ஞான நந்திநின்ற நிலையுஞ்சொன்னேன்
கூறான மனோன்மணிநூல் நூறும்பார்த்துக்
குருவான சற்குருவைப் போற்றச்சொன்னேன்
நீரான மானிடர்தம் மாயைவிட்டு
நிச்சயமாம் புத்தியினுல் நிலையென்றேனே. (24)

வெண்சாரைக் கற்பம்.

நிலைக்கவொரு கற்பமுண்டு சொல்லக்கேளு
நிதியான வெண்சாரை யிருக்குங்குன்றில்
குலைக்குமாத் தின்கீழே வட்டப்பாறை
கூறான புத்தென்பார் கிரியைச்சொல்லார்

மலைக்குமது வுள்ளாக விளைந்துபத்து
    மாதமது சென்ருக்கால் மேலேபொங்கும்
அலைக்குமது பூநீரென் றறியவேணும்
    அப்பவல்லோ கற்பமது அமுதமாமே. (25)

அமுதமென்ற வல்லியடா ஆதிசத்தி
    யாடினு ளந்தமென்ற சிவத்தினலே
குமுதமென்ற வீரியந்தான் வந்துபாய்ந்தால்
    கொடுநாகக் கன்னியரைக் கூடிச்சேர்ந்தார்
திமிர்தமென்ற விந்தாலே அஞ்சுமாச்சு
    சிவமாச்சு இப்பொருளைச் செப்பார்யாரும்
எமதுநின்ற பெயர்ஞானந் தீட்சைகற்பம்
    யெழிலான வாதமநு ளைந்துதானே. (26)

ஐந்தான சிவாயநமா வென்றபோதே
    அம்பிகையுஞ் சிவனுமங்கே ஆடினர்கள்
இந்தான பூரணமு மிரவிதானும்
    ஏமமென்ற நந்தியுள்ளே யேறிக்கொண்டார்
மூந்தான மூர்த்திகளுஞ் சத்திதானும்
    மூதண்டச் சித்தர்களுந் தேவர்தானும்
வந்தான ஞானபரஞ் சோதிதானும்
    வஸ்துநின்ற நிலைகண்டு மனந்தேர்ந்தாரே. (27)

தேர்ந்ததென்ன மனேன்மணியாள் தீட்சையாலே
    தெளிவானர் சற்குருவின் பாதத்தாலே
மார்ந்ததென்ன மயக்கமுற்ற மனத்தினலே
    மண்ணச்சு ஞானமொடு தீட்சைவாதம்
சார்ந்ததென்ன வழலையெனு மூப்பூவாலே
    தனித்தென்ன சிவனின்ற விந்துவாலே
நேர்ந்ததென்ன வென்றுநிலை கண்டபேர்கள்
    நித்தசுத்தப் படிகமென நிற்குந்தானே. (28)

நிற்கின்ற நிலைதனிலே நிற்கவேணும்
    செஞ்சமதி லாறுதலங் காணவேணும்
திக்குலகு அண்டமெங்குஞ் சுத்தியாடித்
    திரும்பியொரு நொடிபொதிகை சேரவேணும்

கைக்குள் நின்ற கனியருந்தி யுண்ணவேணும்
　　கர்த்தாவைச் சித்தமதிற் காணவேணும்
பக்குவத்தை யறிந்தவர்க்கு வாதந்தன்னைப்
　　பச்சைபச்சை யாய்விரித்துப் பாடுவேனே. (29)

பச்சையென்ற உப்பினுட கட்டுச்சொல்வேன்
　　பாங்கான சவுக்கார வழலைக்கேத்த
கொச்சையென்று யெண்ணாதே உப்பினாலே
　　கூறான வாதமொடு ஞானமாச்சு
இச்சையென்று கட்டுதற்குக் கல்லுப்பாகும்
　　எடுத்திடு நீ படிரெண்டு பாண்டத்துள்ளே
நிச்சயமா யண்டமது முப்பத்தொன்று
　　நேராக உப்பினுள்ளே புதைத்துவையே. (30)

வைத்தந்தக் கும்பத்தின் மேலேமூடி
　　வாகாகச் சீலைமண்ணும் வகையாய்ச்செய்து
மெய்த்தந்தக் கலசத்தைப் பெரும்பாண்டத்துள்
　　மேல்கீழு மூவர்மண்ணை மேவிப்போட்டு
சித்தந்தப் பாண்டமது முன்போற்செய்து
　　திங்களிரண் டானபின் திறந்துபாரு
மொய்த்தந்த உப்புடனே அண்டங்கட்டும்
　　முறையாகச் சுண்ணம்பின் சூட்சங்கேளே. (31)

சூட்சமென்ற சுத்தவெள்ளைக் கல்லையப்பா
　　தொடுகுறிபோற் சுண்ணம்பாய்த் துணிந்துசொல்ல
வாச்சுதென்று சித்திரைவை காசிதன்னில்
　　வந்தருளு மக்கினிநட் சேத்திரநாளில்
மூச்சுவிட மாட்டாது சுண்ணக்கல்லு
　　மூதண்ட பிறவிபட மணலிற்போடு
காச்சாத வெயிற்காயி லுப்பிலேடே
　　காரணமாங் குருவண்டு நீருஞ்சேரே. (32)

சேத்தந்த நீராட்டச் சுண்ணக்கல்லு
　　திடராச்சு புடம்போடச் சுத்தச்சுண்ணம்
ஆத்தியெடு வூசரத்தின் வகையைச் சொல்வேன்
　　அடுக்கடுக்கா யாதியென்ற வுப்பைத்தொட்டு

வாத்திடவே யுவர்மண்ணைப் பாண்டத்துள்ளே
வடிந்தநீர் தனைக்காய்ச்சு உப்பதாச்சு
தேத்திடவே அமுரிதனைத் தேத்தான்வித்திற்
றெளிவான நீராகு மென்னலாமே. (33)

நல்லெண்ணெய்.

என்னப்பா நல்லெண்ணெய் விபரங்கேளு
யியம்பார்கள் நாதாக்க ளீசன்றானும்
உன்னப்பா முன்சொன்ன அமுரியிற்றான்
ஊறவைத்த எள்ளதனை யுலரப்போட்டு
பன்னப்பா பாங்காகத் தோடுதள்ளிப்
பறுக்கையென்ற பருப்பெல்லாம் வாரிக்கொண்டு
பின்னப்பா ஆட்டியெடு எண்ணெயாச்சு
போமான சவுக்காரப் பிலுக்குத்தானே. (34)

சவுக்கார வைப்பு.

பிலுக்கான சவுக்காரம் வைக்கமக்காள்
பேசாதே பாண்டமதிற் பொத்தலிட்டுக்
குலுக்காகப் பண்ணாடை மேலேபோட்டுக்
கூறான துயிலதுமேல் விரித்துப்போட்டு
மெலுக்கான உவர்மண்ணை யதன்மேல்போட்டு
மேலாகச் சுத்தஜல மேவத்தூவ
நிலைக்கான தண்ணீரெல்லாங் கீழேபோகும்
நிற்குமடா மணற்சுத்தி நிசத்தைப்பாரே. (35)

பாரப்பா நீரெல்லாம் வடிந்தபின்பு
பாண்டமொன்று அடியிலிதை மேலேவைத்து
நேரப்பா உப்பொன்று சுண்ணம்ரெண்டு
நேரான ஊசரமோ படிதானெட்டு
சேரப்பா யிடித்தெல்லாம் பொடியதாக்கித்
தெளிவான யெண்ணெய்தனைத் தெளித்ததூளை
ஆரப்பா பாண்டத்தின் மண்மேற்கொட்டி
யமுத்தியதி லமுறிபடி பதினாற்றே. (36)

ஊத்திடுவா யைந்துவிர லாலேயள்ளி
ஓகோகோ வத்தவத்த வூத்தவூத்து
நேத்தியுள்ள காரமெல்லாங் கீழேபாய்ந்து
நிமிர்ந்துதடா சவுக்காரம் நேர்மையாச்சு
போத்திடுவாய் சதாசிவத்தை யருளாலுன்னிப்
புகழான மனோன்மணியே யென்றுபூசி
ஏத்திடுவாய் ரவியில்வைத்து உண்டையாக்கி
என்னசொல்வேன் சவுக்கார எண்ணெய்வாங்கே. ()

வாங்கியல்லோ புடம்போடச் சுண்ணமாகும்
வழலையெனும் போாகுஞ் சித்தர்க்கெல்லாந்
தாங்கியல்லோ சொல்லிவிட்டே னுலகத்தோர்கள்
சவுக்காரம் வைப்பமென்பார் குருக்காணாமல்
ஏங்கியல்லோ சுண்ணமூட னுவருஉப்பை
யெடுத்தமூறி யெண்ணெய்யினு லேறுமென்று
வாங்கிவைப்பார் வண்ணார்க்குத் துமிலுக்காகும்
வழலையென்றுற் றெரிவதுண்டோ மனுடமாடே. (38)

மாடாகத் திரியாமற் சட்டைநாதர்
வகாரமெனு மாயிரத்தில் வழலைச்சுண்ணம்
ஈடாகச் சொல்லிவிட்டா ரெண்ணெய்வாங்கு
மேனுமடா வாதமென்ற துருசிற்றூனே
பாடார்கள் மதயானை கட்டுமென்று
பரிவான வாசியைப்போல் மறைத்துப் போட்டார்
வீடாகக் குடிபுகுந்தே னுகையாலே
மெஞ்ஞான வகத்தியனென்று பேருமாச்சே. (39)

நூலின் பெருமை.

போான ரசிதமென்ன சவுக்காரத்தாற்
பிலத்துநின்ற துருசினுட வீரியத்தால்
சேரான புலனுகச் சூதமென்றுஞ்
சித்தர்முனி யீசுரருந் தேர்ந்துபார்த்து
நேரான தென்னுடைய நூலைவைத்து
நிட்சயமாய்ப் படித்தார்கள் கோடாகோடி
சீரான நூலதனை மறைத்துவைத்து
சிறப்பாக நாதாக்கள் படித்தார்பாரே. (40)

படித்ததென்ன வாதமென்னு மிருநூற்றுள்ளே
பாங்கான வழலையுப்புப் பரிவாய்ச் சொன்னேன்
பிடித்ததென்ன வென்று நிலை பிடித்துப்பார்த்துப்
பிசகாமற் பிடித்தவர்க்கு வாதசித்தி
எடுத்ததென்ன ஆதியென்ற அருசினாலே
ஏகாந்த மலையுலகும் பொன்னேயாகும்
குடுத்ததென்ன செந்தூரக் குணத்தினாலே
குறிப்பறிந்து கொண்டுசற் குருவைக்கேளே. (41)

கேட்கையிலே உனதாதிரங் கண்டுகொண்டு
கேள்வியினா லுன்மனதை விசாரிப்பார்கள்
பார்க்கையிலே சரியைஎன்ன ஞானமென்றால்
பறந்துதடா பெண்ணாசை பாவிமாயை
தாக்கையிலே யாசைகொண்டாற் சரியையாச்சு
சமுசாரந் தள்ளிவிட்டால் ஞானமாச்சு
சேர்க்கையிலே சிவசத்தி தீட்சைதன்னைத்
தெரிந்தல்லோ வாதமடந் திறந்தார்காணே. (42)

சிஷியர்கள் தெரிய வேண்டியது.

தொட்டல்லோ காட்டாத வித்தைபாரிற்
தொட்டெண்ணிப் போட்டாலும் வராதுவித்தை
விட்டல்லோ தன்னாலே யாருமென்று
மேதினியி லிறந்தவரோ கோடாகோடி
கெட்டல்லோ ஆண்மையினால் மாயைமூடிக்
கெருவமெனு மாங்கார மிடும்பினாலே
பட்டல்லோ கூத்தனுட வலையிற் சிக்கிப்
பதைபதைத்தாற் கேதுகுரு பதத்தைப்போற்றே.(43)

போற்றினால் வாதியுட கருவைச்சொல்வார்
புகழ்ந்துநின்ற வாதமெனும் பிறப்புஞ்சொல்வார்
தேத்தினால் வாமியுட பூசைசொல்வார்
தெளிவான ஞானம்நின்ற திறத்தைச் சொல்வார்
வாழ்த்தினால் மவுனம்நின்ற வடிவுஞ்சொல்வார்
வாகான பிரணவத்தி நிலையுஞ்சொல்வார்
ஆத்தினாற் குருவாக்கால் அறியவேணும்
அல்லாட்டா லொன்றுமில்லை யறிந்துபாரே. (44)

அறிந்துகொண்டு யித்தனையுஞ் சோதித்தாக்கால்
அச்சமத்துச் சொல்லிவிடு உறுதிசொல்வார்
முறிந்துகொண்டு திரியாதே வாதஞானம்
மூச்சுவிடார் பேச்சுவிடார் முறையுஞ்சொல்வார்
பிறிந்துகொண்ட சன்னாசி யனேகருண்டு
பேயருட மயக்கத்திற் போய்ச்சேராதே
உறிந்தநின்ற புளித்தோடும் விரைதான்போலாம்
உத்தமர்க்கு யித்தனையு முண்மையாமே. (45)

பொய்க் குருக்கள்.

உண்மைவிட்டு ஆண்மையினாற் குருக்களென்றும்
ஓம்நம சிவாயகுரு மூர்த்தியென்றுந்
தன்மைவிட்டுக் குறடுதொட்டுச் சாம்பல்பூசித்
தாவடங்கள் செபமாலை தரித்துக்கொண்டு
நன்மைக்கெட்டுக் காவிவஸ் திரங்கள்கட்டி
நாட்டிலுள்ள மானிடரை மிரட்டிக்கொண்டு
வண்மைகெட்டுப் பணம்வாங்கு மீனர்தன்னை
மனந்தனிலே நினைத்தாலு மாயையாமே. (46)

மாயையிலே திரிவோர்க ளனந்தங்கோடி
மனோன்மணிநூல் பார்த்தாக்கா லெல்லாந்தோற்றுஞ்
சாய்கையிலே சார்ந்தவர்க்கு எல்லாஞ்சித்தி
தற்பதத்தின் கிருபையினாற் றானேமுத்தி
வேகையிலே வேகுமடா வினைதீபத்தில்
மெஞ்ஞான நந்தியுட வெளியிற்றொத்திப்
போகையிலே அங்கிருந்து உபதேசித்தேன்
புணிதமென்ற காயமது புகழுண்டாச்சே. (47)

உண்டான கற்பத்தி னுறுதிகாட்டி
உத்துநின்ற உப்பினுட கட்டுக்காட்டி
பண்டான சவுக்கார வைப்புக்காட்டிப்
பார்புகழும் ரசிதமென்ற ஆதிகாட்டி
கொண்டேருஞ் செந்தூரக் குறியுங்காட்டிக்
குருவான சற்குருவைக் குறித்துக்காட்டி
மிண்டான வுலகத்தின் குருவுங்காட்டி
வேதையந்த சாரமெல்லாம் விளம்பினேனே. (48)

விளம்பினே னுதியென்ற தீட்சையெல்லாம்
மெய்நிறைந்து சத்திசிவன் நின்றமார்க்கம்
குளம்பி நீ போகாதே மாயைவிட்டுக்
கூடுவாய் துறவியென்ற மவுனந்தன்னிற்
பழம்பொருளாய் நின்றறிவை யறிந்துபாரு
பரமசிவன் தீட்சைபத்தும் சத்திபத்தும்
திழம்பெறவே காந்திஒளி சுத்தவெள்ளை
நின்றநிலை தெரிவோர்க்கு நீசம்போமே. (49)

நீசமென்னுங் காமவலை நீங்கிற்ருனல்
நிலைத்துதடா சிவகிருபை நெஞ்சந்தன்னில்
பாசமென்ற பெண்மாயை காய்ந்துபோச்சு
பாராபரையாஞ் சத்தியுட தீட்சையாலே
கோசமென்ற பீசமது உறுதியாச்சு
குருநாதன் றெரிசனத்தா லெல்லாஞ்சித்தி
நேசமென்ற கருவேது மனதாற்றேர்ந்து
நிச்சயமா யொருநினைவாய் நினைத்துப்பாரே. (50)

தெட்சணமூர்த்தி யென்று பேர் கொடுத்தது.

பாரப்பா அண்டபகி ரண்டந்தாண்டிப்
பாதாளச் சக்கரமும் பதமுந்தாண்டி
நேரப்பா அகண்டபரி பூரணத்தில்
நிலைத்துநின்றேன் சுழினையென்ற துறவினுள்ளே
ஆரப்பா வென்றுசொல்லிச் சிவனும்வந்தார்
அப்போது அகத்தியனு னென்றுசொன்னேன்
பேரப்பா தெட்சணமூர்த்தி யென்று
பேருவைத்துப் பிரபலமாய் பேருண்டாச்சே. (51)

பேர்கொடுத்து மெஞ்ஞானந் திறந்துசொன்னுர்
பெருஞானம் பாடுதற்கு அருளுந்தந்தார்
ஆர்கொடுத்தார் சிவனுமையு மெனக்குத்தந்தார்
ஐயருட கடாட்சத்தா லருளும்பெற்றேன்
நேர்கொடுத்துச் சாத்திரங்கள் பாடுதற்கு
நிச்சயமா யென்னுவி லெழுதிவிட்டார்
சீர்கொடுத்து இன்னூலைப் பாடுமென்று
செப்பியே மகாமேரைக் கருதினுரே. (52)

கருதிநின்ற பொறிபுலனும் கர்மத்தாலே
காசினியில் தீட்சையில்லை கழண்டுபோச்சு
உருதிநின்று கண்டவர்க்குத் தீட்சையப்பா
ஓங்காரக் கணபதியா மருளினாலே
பொருதிநின்ற அட்சரங்களைப்பத்தொன்றும்
புகழான ஆறுதலந் தன்னில்நிற்கும்
அருதிநின்ற அஞ்செழுத்தும் அகாரத்துள்ளே
அமர்ந்திருக்கு மூன்றெழுத்து மதுக்குள்தானே. (53)

தானென்ற பத்துவகை தீட்சையாலே
சாதகமாய் பிரமையென்ற விதியைத்தள்ளி
ஏனென்ற உலகத்தி லெல்லோருக்கும்
இம்மையல்லோ பலகாரம் பண்ணைச்சொன்னேன்
கோனென்று அவனிருந்த கிலிதானப்பா
கொல்லுதடா உலகத்திற் கூத்தனென்று
நானென்ற தீட்சைகண்டா லிதுமெய்யாகும்
நாதாக்கள் பேர்கொடுப்பார் நாதனென்றே. (54)

நாதனென்ற நாதனுக்கு விதிதா னுண்டோ
நந்தி நின்ற வொளிதனிலே யிருள் தானுண்டோ
வாதமென்ற வாதிகட்கு மயக்கமுண்டோ
வழலையுப்புக் கண்டசித்தன் மாள்வதுண்டோ
வேதமெனுஞ் சாஸ்திரங்கள் கற்றிருப்போர்
மேதினியி லவர்களுந்தான் மாய்வதுண்டோ
பூதமென்ற ஐந்துமன மயக்கங்கண்ட
புண்ணியர்க்கு விந்நூல்தான் புனிதமாமே. (55)

கணையெருமைப்பால் கற்பம்.

புனிதமென்ற தென்பொதிகைக் கேறுவோர்க்குப்
புகழ்பெருகுங் காந்தமலை யடியிற்சென்று
கணையெருமை விருட்சமதைச் சுத்திவந்து
கண்ணதுபோ லேகதறிக் கறந்துபாலை
இனமுடனே பீங்கானில் முன்னேவைத்து
யீரெட்டு உருவேத்திச் சிவாயமென்று
மனிதரென்ற மாயைவிட்டுக் கழஞ்சுபத்து
மாதமுண்ணப் பெண்ணாசை மடிந்துபோச்சே. (56)

போச்சடா மதனுடைய ஆண்மையெல்லாம்
பூலோக காரணமாய்ச் சித்தனென்று
ஆச்சடா அண்டபகி ரண்டந்தாண்டி
ஆறுவரை ஏறுதற்கு அறியலாச்சு
மூச்சடா நந்தியிலே யொடுங்கிப்போச்சு
மூதண்ட மதியமுதஞ் சிந்தலாச்சு
பேச்சடா யினியேது மவுனியாச்சு
பிரமனுட கெணிதமது யில்லைபோமே. (57)

காந்தமலைச் சித்தரைப்பார்க்கச் சொல்லுதல்.

போமப்பா மலையிலொரு கடிகையேறப்
புத்தர்மதச் சித்தரதில் மெத்தவுண்டு
காமப்பால் தெரிந்துலகு வேம்புதன்னைக்
கையாத வேம்பாக்கிக் கற்பங்கொள்வார்
தாமப்பா அவ்விடத்திற் சென்றேதானும்
தனதாக வருவோரைப் பணிந்துபோற்றி
நாமப்பா உங்கள்பிள்ளை யென்றுசொல்லு
நாதாக்கள் வாருமென்று நலஞ்சொல்வாரே. (58)

சொல்லுவார் கையாத வேம்பின்கற்பம்
சோதிகரு நெல்லிவெண் சாரைக்கற்பம்
சொல்லுவார் கைமுறையா யுண்ணுதற்குச்
சுகமாகத் தங்கள்கிட்ட யிருக்கச்சொல்லி
வெல்லுவார் பொன்முள்ளிச் செடியைக் காட்டி
மெய்யான வாதமிது விளங்குமென்று
சொல்லுவா ரொருவருட மிருந்துதேர்ந்து
சொற்பெரிய சித்தர்களைத் தெண்டம்பண்ணே. (59)

வியாக்கிரமரைத் தெரிசிக்கச் சொல்லுதல்.

தெண்டனிடு மேல்புறத்தில் வழிநேராகத்
தெரியாத குகைவாசல் திறக்கச்செய்து
கண்டளவி லுட்புகுவார் நீயுங்கூடக்
கலங்காமற் போய்ப்புகுதக் காரணங்கள்

விண்டிடவும் நாவுமுண்டோ பாவுமுண்டோ
வெட்டவெளி யாயிருக்கு முள்ளேபாதை
கொண்டபின்பு முனிசித்தர் தன்னைக்காண
குருவான வியாக்கிரமரைக் குறித்துப்போற்றே. (60)

போற்றப்பா அஞ்செழுத்தை யையஞ்சாகப்
புகழ்நூற்றெட் டுருவாகிற் சித்தியாச்சு
ஏத்தப்பா எட்டெழுத்தைப் பதினைாக
யிருந்தவியாக் கிரமரங்கே இனிதுகூர்ந்து
பாத்தப்பா வாருமென்பார் பாதம்போற்றப்
பரமரக சியங்காறி லுபதேசிப்பார்
நூத்தப்பா யெட்டுருவில் மேலேபார்க்கில்
நுட்பமாய்ப் படிகமென்ற கதவுகாணே. (61)

குகை காண்பித்தல்.

கதவுதனைக் கண்டாபோ மைந்தாவென்பார்
காரணனே யுன்கிருபை கண்டேனென்றும்
உதவிதரு மனோன்மணிதன் வாசலுக்கு
உட்கதவு மிதுபிள்ளா யென்பாரையா
பதவிபெற்ற னென்றளவிற் றிரவுகோலால்
பளிச்சென்று திறந்துபெரும் பாதைகாட்ட
இதமுடனே குருபதத்தைப் பணிந்துபோற்றி
ஏறுவாய் திகம்பரமென் றெண்ணித்தானே. (62)

எண்ணியே கடிகையொன்று சென்றுயானல்
என்னசொல்வேன் மனோன்மணிதா னிருந்தகுன்றம்
வண்ணமுள்ள பசும்பொன்னுற் குகைதானப்பா
மாசற்ற நவமணியைப் பதித்தவாசல்
புண்ணியமாஞ் சித்தர்வெகு கோடாகோடி
புகழ்பெரிய ரிஷிமுனிவ ரனந்தங்கோடி
கண்ணும்விண் ணுங் கொள்ளாது காரணங்கள்
கயிலாசப் பதவியிது காணுவோர்க்கே. (63)

காணுதற்கு வட்டமடா சந்திரன்போலே
களங்கமற்ற பீடமொன்று குகைக்குள்ளாகத்
தோணுதற்கு என்னசொல்வேன் நடுமையத்திற்
சொற்பெரிய மனோன்மணிதா னிருந்தகாந்தி
பூணுதற்கு வீசுமடா மகிதான்கோடி
புகழ்வன்னி ரவிகோடி யொளிவோமெத்த
நீணுதற்கு யிருந்தருளும் பெரியோர்தம்மை
நீபணிந்து அவ்விடத்தில் நின்றுபாரே. (64)

பார்க்கையிலே நாதாக்க ளூனையேமெச்சிப்
பாதைகண்டு வந்தாயோ பொதிகைக்கப்பா
நோக்கையிலே யெவராலு மறியப்போகா
நுட்பமென்ற பாதைவழி நீயேகண்டாய்
ஏர்க்கையிலே மனோன்மணியைக் கண்டுகொண்டு
இதமாகச் செல்லுமென்பார் குகைக்குட்பூந்து
பார்க்கையிலே மனோன்மணியைப் பணிந்துபோற்றே
பரமான அஞ்செழுத்தைப் பகருவாரே. (65)

மனோன்மணியைக் கண்டது.

அஞ்செழுத்தும் வஸ்துவுட கிருபைகாணும்
அகண்டபரி பூரணத்தி லாடலாகும்
நெஞ்செழுத்தை நினைத்திடமற் றெழுத்தோயில்லை
நீறாகிப் போகுமடா யோகியாவாய்
பிஞ்செழுத்து ருசியாகுங் கனியுங்காணும்
பேரான மகியமுத மூன்னலாகும்
வஞ்சகத்தை யடித்தோட்டி யகத்தையாட்டி
மனோன்மணிதான் பொதிகைவழி காட்டினாளே.(66)

காட்டினாள் செகசோதி மகிமைதன்னைக்
கண்ணொளியாம் விண்ணொளியின் காந்திதன்னை
ஊட்டினாள் மூதண்ட வேகியத்தை
உட்கொண்ட போகிலே யுயாத்தூக்குந்
தாட்டிநீ மலையைவிட்டுப் பொதிகைக்கப்பா
தான்வருவாய் நானுமங்கே யிருப்பேன்கண்டு
கூட்டினார் சகலசித்து முனக்குள்ளாகக்
கூடுகிற வழிகண்டு கூறினேனே. (67)

கூறினே னிதுக்குமுன்னே காந்தமென்ற
    குன்றினுக்கு வடமலை காதமுண்டு
ஆறினே னவ்விடத்தில் நதிதானுண்டு
    அதுக்கடுத்த கீழ்புறத்தில் அதிசயங்கேள்
ஊறுநீர் நச்சுநீர்ப் பொய்கையொன்று
    உரைத்திடுவா ருலகரெல்லா முண்மையாகப்
பாருநீ பாலமது மேலேயப்பா
    பண்பான நீரைமறைத் திட்டார்பாரே. (68)

மறைத்திருந்த நீரினுட பேரைக்கேளு
    மானிடர்க்கு நச்சுநீர் விஷநீரென்றும்
உரைத்திருந்த பெரியோர்க்கு அமுதமென்றும்
    உண்மைதரும் வழலையென்றும் வஸ்துவென்றும்
நிறைத்திருந்த பாணமென்றும் லகிரியென்றும்
    நீங்காத பச்சைநீர் பூநீரென்றும்
குறைத்திருந்த யீசனுக்கு விந்துவென்றும்
    கூறுவார் மதியமுதங் கொள்ளக்கேளே. (69)

கேளப்பா அந்நீரைக் கொள்ளுதற்குக்
    கெடியாக முன்வாமி பூசைசெய்து
நீளப்பா யோகியென்ற விரத்தனாகி
    நீங்காத சிவகிருபை நெஞ்சில்வைத்து
வாளப்பா சுனையடுக்க வந்துநின்று
    வாகான கல்லையொன்றை வாங்கிப்போட்டு
வேளப்பா கலசத்தில் நீரையேந்து
    வினைதீரக் கொள்ளுகிற விதத்தைக்காணே. (70)

காண்பதற்கு யிந்நீரைப் பீங்கான்றன்னில்
    கலங்காமற் காற்படிதா னிருத்துக்கொண்டு
ஊண்பதற்கு சிவசத்தி எழுத்தினாலே
    உருவேற்று மந்திரெழுத்தை யொருநூற்றெட்டு
பூண்பதற்குப் பூரமொரு கழஞ்சிதன்னைப்
    பொடியாக்கித் தூவிடவே பாலாய்ப்போகும்
வீண்பதற்கு நச்சுநீ ராயிருக்கும்
    மெய்ஞ்ஞானசித்தருக்கு அமுதந்தானே, (71)

மெய்யானப் பாலையுண்டு தேறவேணும்
விஷமான நஞ்சையுண்டால் மாளவேணும்
பொய்யான சீடர்களைத் தள்ளவேணும்
புத்தியுள்ள பிள்ளைகளைச் சேர்க்கவேணும்
பையான காந்திதரு மாசம்பத்தும்
பாலுண்டு ஒடுக்கமென்ற சமாதிவிட்டு
ஐயாகேள் காந்தமலை யடியிற்சென்று
அப்பவல்லோ கனைபெருமை யமுதங்கொள்ளே. (72)

கொண்டாக்கா லெனைக்கண்டு கொள்வாயப்பா
கூறுவேன் நினைப்போலே நீடுழிவாழ்க
விண்டாக்கால் தெரியுமப்பா அட்டசித்தும்
விளையாடக் குருவைவைத்து விளக்கஞ்செய்வேன்
உண்டான பொருள்களெல்லா முனக்குள்ளாச்சு
ஓகோகோ யிந்தமுறை யொருவர்சொல்லார்
பண்டான யீசனிந்தப் படியெனக்குப்
பக்குவத்தில் தந்ததையான் பாடினேனே. (73)

நூல்தொகுப்பு.

பாடினேன் ஞானத்தில் பத்துநூறு
பாங்காகக் குருமுடிப்பு நூறுசொன்னேன்
கூறினே னறிவாகத் தீட்சையப்பா
குருவாக யிருநூற்றிற் குறியைச்சொல்லித்
தேடினேன் பூஜாவிதி யிருநூறுள்ளே
சிவகாமி மனமகிழப் பூசைசெய்ய
ஆடினேன் பன்னிரண்டு காண்டந்தன்னில்
ஆராய்ந்து பார்த்தறிநீ அறிவித்தேனே. (74)

வித்தான ஆயிரத்தி யிருநூறுக்குள்
மேன்படவே சவுமியமாம் வாதமொன்று
சித்தான காரியத்தைத் திறந்து போட்டேன்
திறமான சவுக்காரச் சுண்ணமாதி
கொத்தான வயித்தியந்தா னிரண்டுலட்சங்
கூறினேன் லட்சத்தைச் சுருக்கிப்பாடி
முத்தாகக் கைபாகந் தேர்ந்துசொன்னேன்
முறையாகப் பதினாயி ரத்தில்தேர்ந்தேன். (75)

தேர்ந்தல்லோ குணங்குறியுங் கற்பத்தோடு
திசையான வாயிரத்துள் தெளிவாய்ச்சொல்லி
ஆய்ந்தல்லோ உலகோர்க்கும் பூரணந்தான்
ஆயிரத்தி யிருநூற்றில் விரித்துச்சொன்னேன்
சாய்ந்தல்லோ போகாமல் நானூறுக்குள்
சகலகலை சேதியெல்லா மடக்கிப்போட்டேன்
வாய்ந்தல்லோ வாதவைத் தியங்கள்தானும்
மகத்தான யாக்கோபு விண்டிட்டாரே. (76)

தானான மணக்கோலம் மிருநூறுள்ளே
சகலசித்து மானதிந்த நூலினாலே
ஏனான இருநூற்றிப் பதினாறுக்குள்
இயம்பினேன் யாவையுமே வெளியதாக
கோனான யிந்திரமந்திர சாலமெல்லாங்
கூறினேன் சத்திசா லத்திலேதான்
தேனாக நான்சொன்ன சாஸ்திரந்தன்னைத்
திரட்டினாற் றெரியுமிந்தத் தெளிவுதானே. (77)

100917

தெளிவான காந்தமலை காணவேணுஞ்
சித்தரென்றால் மனோன்மணிதாள் சேரவேணும்
அழியாத கற்பமுண்டு யிருக்கவேணும்
ஆனந்த தீட்சைபத்து மறியவேணும்
வெளியான பொதிகைமலை யேறவேணும்
மெஞ்ஞானி யென்றுபே ரெடுக்கவேணும்
ஒளியான நந்தியடா காணவேணும்
ஓகோகோ உண்மையெல்லா மோதுவாயே. (78)

ஓதவே மவுனதெரி சனத்தினாலே
உறவான பெண்ணாசை தள்ளச்சொன்னேன்
கோதறவே கோசமொடு பீசங்காட்டிக்
குடிகெடுக்கும் பிரமனுட விதியைத்தள்ளி
தீதறவே கூத்தனையு மடித்தொழித்து
தென்னிலங்கும் காந்தமலை தன்னைக்காட்டி
போதாவே கனையெருமை யழுதழூட்டிப
புனிதரெனுஞ் சித்தர்தமைக் காட்டினேனே. (79)

காட்டினேன் குகையில்வியாக் கிரமர்தானும்
காரணமா மனோன்மணிதன் னிருப்பு நாட்டி
தீட்டினேன் பொதிகைவழி யேதுமார்க்கம்
திடஞ்சொன்னே னேறுதற்குச் சித்தனென்று
ஊட்டினேன் நச்சுநீ ரமுதமாக
உண்மையுள்ள நூலினுட வகையுஞ்சொன்னேன்
பாட்டினு லென்னவரு மென்பார்மாண்பர்
பாகெதிக்கு வழிகாணப் பாதையாமே. (80)

கற்பமுறை.

பாதை யென்ற அட்டாங்க யோகியானல்
பார்மகனே கற்பமொன்று சொல்வேன்கேளு
பேதையென்று மலையாதே பொதிகைக்கப்பா
பிரபலமாய்க் கோடியோ சனைதான்மேரு
கோதையென்ற அரவதிலே யிடப்பாகத்தில்
கொடுவிடமாம் வெண்சாரை வலப்பாகத்தில்
வேதையென்ற மேருகிரி தனிலேபின்னி
விளையாடு மிரண்டுமொன்ருய் விஷமதாமே. (81)

விஷமான அரவு ரெண்டும் பிணைந்துநிற்கும்
வேதாந்தக் காமமெனும் பீடந்தன்னைக்
குசமான யோகியவ ரிடத்திற்சென்ருல்
கொடுவிடந்தான் முழுங்கிவிடு மலமாய்ப்போவார்
நிசமான குளிகைகொண்ட சித்தரானல்
நிமிசத்திற் காமபீ டத்தைநீக்கி
சிசமான தீட்சையினுற் போனலுந்தான்
சேரொட்டா தரவிரச்சல் தேர்ந்துபாரே. (82)

தேர்ந்துபா ராதியந்தம் நடுவுமில்லா
தேயிருந்த காலத்தில் தெட்சணத்தில்
சேர்ந்துபார் நான்பிறந்த பின்புதொண் ணூற்
ருறு கோடி யென்றவ கழிந்தார்யோகி
ஆய்ந்துபார் சத்திசிவ னெனக்குமுன்னே
அப்பனைத்தான் காமமெனும் பீடந்தன்னை
சேர்ந்துபார் கொண்டுவந்தா லீசனென்ற
தேமமென்று சொன்னதினுல் நான்சென்றேனே. (83)

சென்றளவிற் ரெண்ணூற்றுற் கோடிபேருந்
திடம்போலே துடர்ந்துவந்தார் வடமேரென்று
குன்றளவில் நின்றிறந்தார் சிலபேரப்பா
கொடுவிஷத்திற் கிரையாகு மதனிற்பாதி
நன்றழகு காமபீ டத்தைவாங்கி
நழுவவிட்டு மாண்டார்கள் தோஷந்தீர
வென்றளவில் வெற்றிகொண்டு சிவன்முன்வந்து
விமலருக்குங் காயாசங் கொடுத்தார்பாரே. (84)

காயாசங் காயமெனும் பீடந்தன்னைக்
கழலாமற் சுத்தி நிற்கு மருணகாந்தி
காயாச மதுவப்பா மேருதன்னிற்
கனகமென்ற கற்பமது காமபீடம்
காயாசம் வாங்குதற்குச் சித்தரெல்லாங்
காமமெனும் பீடமது கொண்டுவந்தார்
காயாசங் கொடுப்பேனுன் வேதைகாணக்
கற்பமொன்று கோடியெனுங் காலந்தானே. (85)

காலனென்ற சேதியப்பா கரண்யாசந்தான்
காவியினுற் றுவைத்ததுணி தனக்குமாதர்
சீலனென்று வொளித்ததுணி மெத்தவுண்மை
செங்காவித் துணிபோட்டுத் திருட்டுவேடம்
வாலையென்ற செபமாலை யறியாமூடர்
மறப்பாகிப் பூண்டதொரு வண்டருக்கு
நூலையென்றுங் காட்டாதே பொருட்சொல்லாதே
நூற்றாண்டு தவமிருந்தும் நூல்காண்பாரோ. (86)

பார்த்ததுமுன் சிவன்சொன்ன ஞானமெந்தன்
பக்குவத்திற் சத்திவைத்த தீட்சைபத்தும்
சேர்த்ததுமுன் மவுனமொடு யிருபத்தொன்றுஞ்
செப்பினு ரிருபேருந் தெளியச்சொல்லிக்
கோர்த்ததிந்த நூல்சத்தி சிவத்தினுனே
குருவான பரஞ்சோதி கூட்டமானே
ஏர்த்ததிந்த நூலைவிட்டால் ஞானவாத
மில்லையப்பா தீட்சைமுத லெவருங்காணர். (87)

ஆனை தீட்சையெல்லாம் வாமதீட்சை
யப்பனே யகாரமென்ற வஸ்துவாலே
வானை அறிவாலே யறியவேணும்
மற்றொருவர் சொன்னாலும் வராதுகண்டாய்
தேனை கற்பமென்ன வாதமென்ன
தெரிசனத்தாற் சமாதிகண்ட சித்தர்க்கெய்தும்
கோனை சமாதிநிலை யறியாமட்டை
கொள்ளுவார் சாரூயம் வஸ்துவென்றே. (88)

சாரூயங் கஞ்சாவைக் குடிப்போரேபெண்
சாண்டுகளை மூத்திரத்தைக் குடித்தால்நன்றே
வீரூன யோகதண்டைப் பிடிப்பார்மூடர்
வீண்தண்டைப் பிடித்தாக்கா லெதுவுண்டாமோ
கூரூன கற்பத்தை யறியாவிட்டாற்
கொடும்பச்சை நாபிதனைக் கொண்டுமாள்வான்
நீரூன துருசுவடா ஆதியாதி
நிலைக்காட்டா லிந்நூல்தான் நிந்தையாமே. (89)

நிந்தையினு லோகமெல்லா மழிந்துபோச்சு
நிலைகண்ட பெரியோர்கள் கண்டகட்டு
மந்தையிலே மதிற்போலே வெளியைக்கட்டும்
வழலையென்ற சவுக்காரம் வந்தவாறுஞ்
சிந்தையினுல் நினைத்தபொருட் சித்தியாலே
தெளிவான உப்பப்பா கம்பிநீளுஞ்
செந்தியிலே கோடியுக முருக்கினுலுந்
தேயாது பொரியாது நிறம்போகாதே. (90)

போகாது போகாது ஞானிசீவன்
புகழான உப்புமந்தப் படிதானப்பா
வேகாது வேகாது ஞானிதேகம்
மெய்யான உப்புமந்தப் படியேயாகும்
சாகாது சாகாது ஞானவஸ்துத்
தானுமந்தப் படியாகு முப்பூவுப்பு
ஆகாது ஆகாது கறியுப்பப்பா
அவனியுள்ளோர் ஞானமந்த உப்புக்கூறே. (91)

உப்பறியப் போகாது மணிதாற்றன்
உலகமெல்லாம் படைத்தகர்த்தன் கனகமேரு
செப்பறிய உண்டுபெண்ணி யிருந்தவஸ்தாம்
சிவன்கண்டு எந்தனுக்கு உபதேசித்தார்
இப்பெரிய சித்தருக்கா யுபதேசித்தேன்
ஏகாந்த மனோன்மணியாள் பூஜகர்க்கும்
கொப்பரையாந் தேங்காயின் நீரைப்போலே
கூறினேன் மனோன்மணிநூல் நூறுந்தானே. (92)

மனோன்மணியின் அருளாலே நூறாய்ச்சொன்னேன்
வாகாக யிந்நூலைத் தேர்ந்துபார்த்து
தினோன்மணியாந் தீட்சையிது பதினெண்பேரும்
தேர்ந்ததெல்லா மெந்தனுட நூலினாலே
வினோன்மணியாஞ் சூதமதைக் கட்டுதற்கு
விஷமான வெண்சாரை யாலேயாகும்
கனோன்மணியாம் பசைந்தமண்ணும் விண்ணுமுந்தான்
காரணமா மனோன்மணிதன் சொரூபங்கேளே. (93)

சொரூபமென்ற மணிசரியை கோடாகோடி
சொல்லுவார் கிரியையிலே யனந்தங்கோடி
அரூபமென்ற யோகமெத் தனையோகோடி
ஆனந்த வெள்ளமெனும் ஞானந்தன்னில்
நிரூபமென்றே எழுதிவைக்க யேடுமில்லை
நேர்ந்தாக்கா லஞ்செழுத்து வல்லதுவாலே
கரூபமென்ற கருவெல்லா மிதற்குள்ளாச்சு
காணடா கெவுனமென்ற குளிகைதானே. (94)

குளிகைசாரணை.

குளிகைக்குச் சாரணையைச் சொல்வேன்யான்றன்
குமரியெனும் நீராலே கூடலாச்சு
பழுதற்ற கல்லுடனே மூன்றுமொன்றாய்ப்
பண்பாகப் பிசைந்தளவி லுருண்டையாகும்
வழுவற்ற வூமத்தங் காயினுள்ளே
வைத்தல்லோ எழுசீலை மண்ணுஞ்செய்து
தெளிவுற்ற காடையெனும் புடமேசெய்யில்
சிவசிவா சாரணைதான் சேர்ந்துபோச்சே. (95)

சேர்ந்ததென்ன வாலையொழி மூன்றினாலே
சிவமாச்சு முன்றெழுத்தும் வஸ்துவாலே
சார்ந்ததென்ன நகாரமொடு மகாரத்தாலுஞ்
சத்தியுட கூறாச்சு சிகாரங்கேளு
நேர்ந்ததென்ன வகாரமொடு யகாரந்தன்னில்
நிலைகண்ட ஆதார வஸ்துவாலே
ஆர்ந்ததென்ன அகாரமெனு மெழுத்தினாலே
ஆணுடனே பெண்ணுமென்று அறியலாச்சே.(96)

அறிவதற்குப் பரஞ்சோதி மூர்த்திமூர்த்தி
அலியாச்சு அதன்பிறகு பரையுமாச்சு
தெரிவதற்குச் சதாசிவனு மணியுமாகிச்
சித்தருக்கு யீசன்மயேஸ்வரியுமப்பா
விரிவதற்கு ருத்திரன் ருத்திரியுமாகி
மெய்யான மாலாகி லட்சுமியுமாகித்
திரிவதற்குப் பிரமனெனும் வாணியாகி
செகமெல்லாம் படைத்தபரஞ் சோதிதானே. (97)

சோதியென்ற சுழினையொடு வெளிதான்கண்டு
துலங்கிநின்ற அண்டமெல்லாஞ் சுத்தியாடி
வீதியென்ற வாசியுட பிலத்தினாலே
வேதாந்தக் காமமெனும் பீடங்கொண்டு
ஆதியென்ற வழலையுப்பை விருதுகட்டி
அரன்றனக்குப் பிலன்கொடுத்து ஆண்பெண்ணாக
நீதியென்ற மனோன்மணியாம் பச்சைவல்லி
நிலைத்தபடி தீட்சைமுதல் ஞானந்தானே. (98)

தானான தற்பரனார் தீட்சைமார்க்கம்
சத்தியுட சக்கரமே சார்ந்தபூஜை
வானான யோகிகளே யருள்மெஞ்ஞானி
வழலையென்ற முப்பூவால் வாதசித்தி
தேனான நித்தனையுந் தீட்சையாலே
திடங்கொண்டா லெல்லாந்தா னுகுப்பாரு
வேனான வொன்றுமில்லை வினைதான்சுற்றும்
வேறேது ரவியுப்பாம் மதியுப்பாமே. (99)

மதியுப்பைக் கொண்டாக்கா லதுதான்கற்பம்
மற்றகற்ப மென்றதெல்லா மற்பமாகும்
பதியுப்பைத் தொட்டல்லோ காணவேணும்
பார்மகனே மனதுவைத்து யென்னைப்போலே
விதியைப்பொய் யென்றுயெண்ணித் தள்ளலாச்சு
மெஞ்ஞான சத்திசிவ தீட்சைதாலும்
நதியுப்பைக் கண்டவர்க்குக் கற்பமெய்தும்
நாதாந்த மனோன்மணிதன் தீட்சைமுற்றே. (100)

அகத்தியர் கற்ப தீட்சை ரு

முற்றிற்று.

உ

பரமபதி துணை.

அகத்தியர் திருவாய் மலர்ந்தருளிய,

பூஜாவிதி யிருநூற்றுக்குச் சூத்திரமாகிய

# மனோன்மணியாள்

## நாற்பத்து முக்கோண பூஜாவிதி.

காப்பு.

ஆதியா மனோன்மணியாள் பூஜைமார்க்கம்
    அடைவாகச் சொல்லுதற்குத் தேவிகாப்பு
நீதியாம் நாற்பத்தி முக்கோணத்தின்
    நேர்மையுள்ள அட்சரத்தி னிலைமைசொல்ல
பாதிமதி தனையணிந்தோன் பாதங்காப்பு
    பரிவான மால்தேவி பாதங்காப்பு
கோதில்லாப் பூஜைவிதி முறையோடேதான்
    குறிப்பாகச் சொல்லுதற்குக் கணேசன்காப்பே. (1)

சொல்லாத நாற்பத்து முக்கோணந்தான்
    துரியாதீ தங்கடந்த சோதியப்பா
சொல்லாதே ஒருவருக்கும் வெளியாய்ச்சொல்வேன்
    சொர்ணத்தின் தகடானால் மெத்தநன்று
சொல்லாதே வெள்ளிசெப்பு லெழுதலாங்கேள்
    சுத்தித்தா லட்டகர்ம மெட்டுமாடுஞ்
சொல்லாதே பிரமாண மெல்லாமாகுஞ்
    சூட்சம்நாற் பத்துமுக் கோணஞ்செய்யே. (2)

செய்வதுதா னெப்படியென் றெண்ணவேண்டாந்
    தீட்சைவிதி யிருநூற்றில் திறமாய்ப்பாரு
கொய்வதுகொங் கணர்சூஸ்திரக் கடைக்காண்டத்தில்
    குலாவிபதோ ரைநூற்றிற் கூறினார்பார்

ஐவர்புகழ் சட்டைமுனி ஆயிரத்தில்
ஆனந்த லகிரியுட பூஜைசொன்னார்
தெய்வர்திரு மூலர்மூ வாயிரத்தில்
திறமாகத் தேவிமந்திரந் திட்டித்தாரே. (3)

திட்டித்த சக்கரத்தட் சரங்களெல்லாந்
திறமாகக் கொங்கணர்தன் கற்பம்நூறில்
கொட்டிவிட்டார் சிவதீட்சை சத்திதீட்சை
குலாவியதோ ரிருபத்தஞ் செழுத்தின்மார்க்கங்
கட்டிவிட்டா ரைம்பத்தோ ரெழுத்தின்சூட்சங்
கால்தலையாய் மாறியவட் சரத்தின்மார்க்கம்
வெட்டிவிட்டார் மாயைதனை ஞானவாளால்
வேதாந்த மானவைந் நூறும்பாரே. (4)

பாரப்பா நான்சொன்ன பாட்டுக்கெல்லாம்
பண்புளபூ ஜாவிதியிர் நூறும்வேணும்
காரப்பா பார்ப்போர்க்கு அங்கன்னியாசம்
கரண்யாசஞ் சோடசத்தி னியாசத்தோடு
சீரப்பா தேன்முத்திரை யோணிமுத்திரை
சிறப்பான ரவிமுத்திரை கும்பமுத்திரை
வாரப்பா லிங்கமுத்திரை நாதமுத்திரை
வளமான சின்மயமா முத்திரைதானே. (5)

தானென்ற விறைமுத்திரை காயத்திரியும்
சதுர்சட்டித் தர்ப்பனமுந் தியானஞ்சொன்னேன்
தேனென்ற வஸ்துநவ சாபந்தீர்க்கச்
சிறப்பாகத் தூபதீபம் பூஜைசெய்து
ஊனென்ற உடலுக்குள் கும்பித்தோங்கி
உற்பனமாம் பூரகமும் பகமும்போற்றி
வானென்ற வாசியிநாற் கலையுஞ்சுத்தி
மாதாவைப் பூஜைசெய்ய வரிசைகேளே. (6)

கேளப்பா குருநாதன் செய்திசொல்வேன்
கிருபைபெற்ற நாதனுக்கு வலுமையுண்டாம்
ஆளப்பா இவ்வகையாம் பிரமையாலே
அளவற்ற கர்மங்கள் செய்வார்தோஷம்

வாளப்பா மோசமவர்க் கொன்றுமில்லை
வாழ்வுமெத்த வந்துவிட்டால் நினையாரென்று
நாளப்பா சொன்னநர ஜென்மமெல்லாம்
நாட்டுக்கு விருப்பார்கள் நாடித்தேடே. (7)

தேடினுற் கிட்டாது குறையிருந்தால்
தேகம்விட்டுப் போகுமுன்னே தெரிசிமோட்சம்
நாடினுற் றெரியாது குருதானென்று
நாதாக்கள் வெளிவிட்டார் நாமேதென்பார்
கூடினுற் சாஸ்திரசூஸ் திரமுமுண்டு
குறிகாட்டும் வேதாந்த முடிவுகண்டு
ஆடினுல் நமக்கென்ன ஆவதென்று
அவர்வயிற்றுக் கிரைதேடிப் பிழைப்பார்பாரே. (8)

பிழைப்பார்கள் பெரியோர்க ளேதுசெய்வார்
பெருமையா யறிவனென்று பேசிடார்கள்
குழைக்காது பணிக்கணிந்த சிவனுஞ்சத்தி
கூடியே ஜெபஞ்செய்வார் ஓமஞ்செய்வார்
தழைப்பார்கள் பிறவியில்லை யவர்க்குத்தானும்
தனங்கோடி யீய்ந்தாலும் வெளியாய்ச்சொல்லார்
இளைப்பார்கள் மனதுவர நடந்துகொண்டால்
என்மகனே முன்குறையா லெய்தும்பாரே. (9)

குறையோடு முடிப்பதற்குத் தகடுசெய்து
கொடுமுடியாம் நாற்பத்து முக்கோணத்தை
அரைதோரு மட்சரப்பிர ணவமுமிட்டு
ஆவாகன தேவவட் சரமுமிட்டு
நரைமேவு குழலார்க்கு நந்திக்கம்பம்
நடனபலி வீரபத்திரன் வடுகன்பீசம்
இரையளவுந் தப்பாம லெழுதியங்கே
யென்குருவே யெழுந்தருளு மென்றுசொல்லே. (10)

எழுந்தருளிக் குருவும் நீ ராடிவந்து
 இருகோடி வஸ்திரங்கள் கட்டிக்கொண்டு
வழுவில்லா காயத்திரி ஜெபங்கள்செய்து
 மானதமாய் விபூதியுத் தளமாய்ப்பூசி
பழுதறவே செய்தபின்பு நவகும்பங்கள்
 பராபரைதன் நடுக்கும்பம் குருணிகொள்ள
தழுவட்ட கும்பமெல்லாம் நாழிகொள்ளத்
 தரமாக வாங்கிநீ கும்பத்தை வையே. (11)

வைகும்பந் தனிற்கீழே சதுரமாக
 வகைமெழுகி நெற்குருணி நடுக்கும்பந்தான்
தெய்வகும்ப மெட்டுமெண் ணாழிநெல்தான்
 திறமாக யிட்டதின்மேல் யிலைவிரித்து
ஐயமொன்றும் நினையாதே நெல்லிற்பாதி
 அமுதுபடி பரப்பியட் சரத்தைச்சொல்வேன்
பையவடா வரைபீசம் ஹறீம்சுவாகாவென்று
 பஞ்சகும்ப மஞ்சுக்கும் பகரக்கேளே. (12)

கேளப்பா கீழ்புரத்திற் கும்பமூன்று
 கீர்த்தியா மட்சரத்திற் கும்பமொன்று
சூளப்பா மேற்புரத்திற் கும்பமொன்று
 சுகமான ஐவருமே தெய்வமாகும்
நாளப்பா நமசிவயம் பீசம்போடு
 நன்றான வாயுமூலை சுப்பிரமண்யம்
வேளப்பா குகனுடைய பீஜம்சொல்வேன்
 வேதாந்தச் சஞ்சிதம்பரா ரத்துவமாறே. (13)

ஆறுமே யானதெட்ச ணாமூர்த்திக்கு
 யடைவாகத் தென்புறத்தி லங்கென்றேதான்
கூறுமே கன்னியிலைங் கார்தன் கும்பங்
 குருநாத னில்லாட்டா லேதுமில்லை
சீறுமே யவருடைய வெழுத்துமாச்சு
 சிறுபிள்ளா யிதனாலே சித்தியப்பா
பேரும்நவ கும்பத்தில் புரிநூல்சாத்தி
 பிரணவங்கொண் டச்சரத்தைக் கவிழ்த்திவையே. (14)

கவிழ்த்தியப்பா நிமிர்த்துவைத்துச் ஜலத்தைவூத்தி
கையாறச் சொர்ணபுட்பங் கும்பந்தோறும்
அவிழ்த்திடுவாய் யுன்மனதி லென்றுதேகேள்
அரகரா கும்பவஸ்திரஞ் சோமன்சாத்து
பௌத்திரஞ்செய் தெற்பையிலே குருநாதர்க்குப்
பாங்காகக் கூச்சநவஞ் செய்துகொண்டு
குவித்துமன தொருமையதாய்த் தேங்காய்வைத்து
கூச்சமதின் மேற்சாத்தித் திலதம்போடே. (15)

போடுவாய் கந்தமொடு பரிமளங்கள்
பூசிப்பாய் சுகந்தமொடு புட்பஞ்சாத்தி
நாடுவாய் குருநாதர் நாலுபேரை
நாயகரா மைங்கரர்க்குப் பூஜைபண்ண
வீடுநெல் நிறைநாழி யரிசிதேங்காய்
விரும்பிடுவாய் நற்கனிசர்க் கரைதேனொடு
சாடுகஜ முகர்க்குத்தெட் சணைகள்வைத்துச்
சரஸ்வதியாள் பிர்மாவைத் தியானஞ்செய்யே. (16)

தியானித்து அங்கனியா சங்களோடு
கரண்யாசந் தெய்வகட் டாகச்செய்து
தியானித்துப் பூரித்துக் கும்பிரேசி
திட்டியினால் நடுவணையின் தீர்க்கம்பார்த்துத்
தியானித்துத் தேவிகும் பகம்போலாக
தியானித்துத் தத்துவங்கள் தொண்ணூற்றாறுந்
தியானிப்பாய் பராபரைதன் கும்பத்துள்ளே
தீர்க்கம்நவ முத்திரையா றெழுத்தாற்சாற்றே. (17)

சாற்றியதோர் தெற்பையைக்கை யாலேசாத்தி
தயாதிதியே பரதேவ நமவோமென்று
தேற்றுவாய் வசியத்தில் உருநூற்றெட்டுத்
தெளிவான மோகனத்தி லுருநூற்றெட்டு
சாற்றுவா யிருகரத்தாற் புட்பமள்ளித்
தாய்சிரமேற் றான்போடு கும்பத்திற்கு
சாற்றுவாய் ரெண்டுகையு நிமிர்த்துநீட்டித்
தாய்கும்பந் தனக்குநீ பந்தஞ்செய்யே. (18)

செய்யப்பா நிவேதனமுந் தூபதீபந்
திறமான மணியுஞ்சே கண்டி நாதம்
பொய்யப்பா சொல்லவில்லை மெய்யென்றெண்ணு
பொல்லார்க்கின் னூல்கிட்டாப் பூமிதன்னில்
கையப்பா ஒருமுழத்திற் சதுரமாகக்
கதித்து நீ நாலங்கு லந்தான்தோண்டி
வைமேலே விந்துவட்ட முக்கோணமிட்டு
வடமுகமாய் நாகருட புடமும்வையே. (19)

வைத்தபின்பு மெழுகியதை உலறப்போடு
வகையாக ஓமத்தின் பரீட்சைசொல்வேன்
செய்தசா ணீளமடா சமிதையஞ்சு
சிறப்பாயா லரசுமாப் புரசுஅத்தி
கொய்தடா ஆவின்நெய் யுழக்கதஞ்சு
குறைவிலா நவதான்யங் கூறக்கேளு
மொய்துளுந்தெள் கடலைபொறி துவரைகொள்ளு
மொச்சைதட்டைப் பாசிப்பயர் நவமதாமே. (20)

நவமான ஒன்பதுமே வகைக்குழக்கு
நற்றேங்காய் சென்றுடைத்து முன்னேவைத்து
தவமான ஓமஞ்செய் வகைதான்சொல்வேன்
தத்துவந்தொண் ணூற்றாறில் வகைசெண்டுண்டு
அவமசுா தத்துவமறு பத்துநாலும்
ஆந்தேவ தத்துவமுப் பத்திரண்டும்
பவமான புண்ணியர்கள் பகுத்துப்பார்த்து
பசுபதிபா சம்மூன்றும் பற்றுவாரே. (21)

பற்றுசுர தத்துவமறு பத்துநாலும்
பாழாக ஓம்நசிய சுவாஹாவென்று
முற்றுவார் முன்பேசென் றசுரர்மாள
முக்கியவோம் கும்பயந்திர தத்வமாகும்
சற்று நீ ரிவ்விதமாய்ச் செய்யாவிட்டால்
சகலமுந்தான் கெட்டுவிடுந் தனித்துச்செய்வாய்
சிற்றில்வாழ் சிவகாமித் தாயார்சொன்னாள்
()சப்பாதே யெவருக்குந் திடமென்றாளே. (22)

இடமிதுதான் ஓமகுண்டந் தூபங்காட்டு
சிறப்பாக நாற்சதுரந் தெற்பைபோட்டு
குடவயிர வனைப்போற்றி வோமஞ்செய்து
கோதிவிடு பூதினியயஞ் செழுத்துமோதி
படபடெனச் செய்யாதே படுதீப்பற்றும்
பார்மகனே அட்டகன்மந் தியானியெட்டும்
அடைவாக ஆவின்நெய் நவதான்யங்கள்
அப்பனே வுருவுக்கொன் றாகப்போடே. (23)

போடுநீ பிரணவத்தாற் புட்பந்தூவு
புகழான தூபமணி யோசைசெய்வாய்
பாடுநீ பட்டதெல்லாம் வோமத்தாலே
பாழ்போக வொட்டாது பகரக்கேளு
வீடுமே பலத்துதடா நடனமாடும்
வித்தையிலே நான்சிறிது காலஞ்செய்தேன்
நாடினே னறுபத்து நாலுசித்தும்
நாற்பத்து முக்கோணம் நாடித்தானே. (24)

தானென்ற ஓமவா குதிமுடித்துத்
தான்திரும்பிச் சிகாரத்தின் பூசைசெய்வாய்
தேனென்ற மொழியாட்குப் பலகைபோடு
திருந்தின நாற் காலியின்மேற் பீடம்வைத்து
பானென்ற கோடிவஸ்திரம் பட்டுவஸ்திரம்
பண்பாக சுகந்தமெல்லா மேலேதூவி
வானென்ற மேற்கட்டி விதானஞ்செய்து
வகையாக அபிஷேக மாட்டுவாயே. (25)

ஆட்டுவாய் பலகையின்மே லிலைதான்போட்டு
அதின்மேலே கமலமொன்று கவிழ்த்துவைத்து
போட்டிடுவாய் புட்பபரி சுகந்தமிக்கப்
பொற்கொடியை யெந்திரத்தி லிருத்திவைத்து
மாட்டுநீ மந்திரத்தை ஐயுமென்று
மஞ்சள் நீ ராட்டிஅங் கிலியுமென்று
நாட்டுவாய் சுத்தசலஞ் சவ்வுமென்று
நன்றாக வேணவபி ஷேகஞ்செய்யே. (26)

அபிஷேகந் தேனிள நீர் பாலுங்கந்தம்
ஆபரண மோகனத்தாற் செய்வாயப்பா
அபிஷேக மாட்டையிலே ஓமத்தின்மூன்
அன்பாகத் தெட்சணையுந் தேங்காய்வைத்து
அபிஷேக மூன்பாக ஓமத்தின்மூன்
ஆம்உம்எம் சிவயநம பூதிபண்ணி
அபிஷேகந் தெற்பைசுட்டுக் குழைத்துநெய்யால்
அம்பிகையாள் நெற்றியிலே திலதம்போடே. (27)

திலதமிடு ஐங்கரர்தன் கும்பந்தன்னைத்
தெரிந்தெடுத்து யெந்திரத்துக் கபிஷேகஞ்செய்
திலதமிடு சுப்பிரமண்யர் கும்பந்தன்னைத்
தேவாதி சிரோமணியென் றபிஷேகஞ்செய்
திலதமிடு நவகோடி சாபந்திரத்
தெட்சணா மூர்த்திதனக் கபிஷேகஞ்செய்
திலதமிடு பஞ்சகர்த்தாள் கும்பந்தன்னைத்
தீபாக்கினிக் கபிஷேகஞ் செய்வாய்நீயே. (28)

செய்யப்பா புலத்தியனே யபிஷேகந்தான்
தேவசிரோ மணிகளுக்காய்த் திறந்துசொன்னேன்
ஐயப்பா பாவிகட்குச் சொல்லாதேகேள்
ஆனந்தி வரைகும்ப மபிஷேகஞ்செய்
பையப்பா அபிஷேகஞ் செய்யும்போது
பாதியா மிருபத்தஞ் செழுத்துமோது
நையப்பா பரைகும்பம் நீயெடுத்து
தங்கென்று மலடிக்கபி ஷேகம்நல்கே. (29)

நல்கின்ற மூன்செய்த வினையினாலும்
நாட்டிலுள்ள தேவதைகள் பசாசினாலும்
வல்கின்ற வியாதிகொடும் பாவத்தாலும்
வருங்குழவி யில்லாமல் மலடேயானால்
சொல்கின்ற பராபரையைத் தெரிசித்தேதான்
சூக்ஷமடா தீர்த்தமுள்ளே கொண்டாரானால்
டங்கின்ற விந்துதங்கிக் குழவியாகிப்
[illegible]ாற்சிலையாண் பிள்ளையுண்டு செய்தால்மெய்யே. ()

மெய்யப்பா நான்சொன்னேன் முன்னமேதான்
மேலான ஆயிரத்தி யிருநூறுதன்னில்
பொய்யப்பா சொல்லவில்லை சேரும்போது
புருடருக்கும் ஸ்திரீகளுக்கு மருந்துசொன்னேன்
செய்யப்பா திருமாதைத் தெரிசித்தேதான்
தீர்த்தமுள்ளே கொண்டபின்பு மருந்துசெய்தால்
கையப்பா கைகண்ட தித்தநூலாம்
கைபாகத் துடனேதா யார்சொன்னளே. (31)

தாயார்க்கு கும்பாபி ஷேகஞ்செய்யத்
தான்திரும்பப் பலகையின்மே லிருக்கவைத்து
தாயார்க்குச் சிவந்தபுட்ப பரிமளங்கள்
சாத்தியெட்டு ரெண்டையு மந்திரமாயோது
தாயார்க்கு முத்திரையா னந்தியானஞ்
சந்திரகலை தீபகலை கரணியாசந்
தாயார்க்கு மந்திர பூரணினியாசஞ்
சதுசட்டிய மாகவேதான் பூசைபண்ணே. (32)

பண்ணப்பா எந்தெந்த வியாதிகட்கும்
பஞ்சகவ்வியம் புரோட்சிப்பாய் தெற்பையாலே
பண்ணப்பா நாலுதிக்கும் பந்தனத்தைப்
பரமோட்சம் நல்கும்பின் னதையெடுத்து
பண்ணப்பா திரிகோணம் முன்னேவைத்துப்
பத்திரத்தைக் கிள்ளியதில் ஐவ்வென்றர்ச்சி
பண்ணப்பா வஸ்துவுட கடத்தைவைத்துப்
பஞ்சகவ்வியத் தாற்பூதி தனைக்குழைத்தே. (33)

குழைத்துதான் வசியத்தை கடகமதிற்சாத்திக்
குருநாதன் கும்பத்தில் மோகனத்தைச்சாத்தி
அழைப்பினுற் பூரித்து ரேசகம்போல்வாங்கி
அன்பாகத் தாயார்க்கு முத்திரையுங்கொடுத்து
தழைக்கவே தூபதீபங் களுங்கொடுத்து
தந்திடுவாய் நிவசாபந் தீருதற்குத் தானும்
உழைத்துநீ சிவசத்தி மந்திரமாம்ரண்டுங்
கங்காளி அத்ராயா உம்ப ரென்றுவோதே. (34)

ஓதிப்செங் கைரெண்டால் கடகமதைவாங்கி
உத்தமியாள் முன்புவைத்து ஓம்நமசியென்று
பேதியப்பா பாத்திரங் களைந்துமதுரப்பி
பேழைவயிற் றைங்கரர்தன் பாத்திரமதுஒன்று
நீதியாங் குருவினுட பாத்திரமதுஒன்று
நிர்மலமாம் பராபரைதன் பாத்திரமதுவொன்று
வாதியாம் பொதுவொன்று பெலியதுவுமொன்று
வகையோடே தேங்காயை வைத்துமூடே. (35)

மூடிப்பின் னிலைபரப்பிப் படைப்பேற்றும்வகைகேள்
மோகனத்தாற் பாலிளநீர் பலகாரம்வடைகள்
கோடியென வைத்தாலுங் குறைவில்லையப்பா
கொத்தோடே அடைக்காயிலைகூர்ந்ததனுள்வைத்து
தேடினுலுங்கிட்டாது இந்தவேலை யார்க்கும்
திருந்தமுது தேன்கரும்பு சிறுகடலைப்பருப்பும்
வாடிநின்று மயங்காதே மணியோசைகொண்டு
மகிழ்வாகத் தேவிமந் திரத்தைநீசாற்றே. (36)

சாற்றுவாய் தூபமுடன் தீபம்ஆலாத்தி
சச்சுதா னந்தமென்ற வெழுத்ததுவினாலே
ஏற்றுவாய் தீட்சையது எண்ணான்குமோது
மென்மகனே தாய்பதத்தை மனதிலேவைத்து
ஆற்றுவாய் நீதோத்திரம் நின்றுகொண்டுசெய்து
ஆதியே யுனக்கடிமை யானேனென்று
போற்றுவாய் புட்பமல ரர்ச்சனைகள்செய்து
புகழான வசீகரத்தாற் ஓதிச்சாற்றே. (37)

சாற்றியபின் வேண்டியதோர் தனங்களீய்வாள்
சத்தியந்தான் கேட்டதெல்லாங் கொடுப்பாள்பாரு
போற்றியவர்க் கேதீட்சை ஓதுஓது
புகழான ஓமத்தின் சாத்தியம்பண்ணு
ஏற்றியுன்றன் மனமிருந்தால் தீட்சையோது
இல்லையென்றால் தீட்சைவிதி செய்யவேண்டாம்
ஊற்றமத்துக் குறுதியடா அப்பாசொன்னேன்
ஊரியதொரு யந்திரத்தி னுறுதிவைத்தே. (38)

வைத்தோதி மந்திரத்தை உருவேபோட்டு
வகைப்பிரம கும்பமபி ஷேகஞ்செய்து
கைத்திரமாய்த் தூபமொடு தீபங்காட்டிக்
காரணமாங் குருவுக்கு வர்க்கஞ்சாத்தி
மெய்க்குருவே சிரோர்மணியே யென்றுபோற்றி
மெய்மகிழத் தட்சணைகள் மிகவேவைத்து
கொய்தமலர் தான்சொரிந்து யிரண்டுபாதங்
கும்பிடுவாய் பின்புனக்குச் சாற்றுவாரே. (39)

சாற்றுவார் சகலசித்தும் பலிக்கவென்று
சற்குருவு மனந்திரும்பிக் கும்பத்தேந்திரம்
ஏற்றுவாய் சித்தியென்றுச் சடாணஞ்செய்
யிருதயத்திற் பூரித்து மானதமாய் நீயும்
போற்றுவார் பதஞ்சலிவி யாக்கிரமர்தானும்
புகழான கமலரிஷி ரோமர்பிர்மர்
ஆற்றுவா ரிவர்களுமிப் படியேதானும்
அனுதினமு மண்டலந்தா னோதுவாரே. (40)

ஓதுநீ தூபம்நை வேத்தியந்தன்னை
உத்தமனே மண்டலந்தான் செய்தால்சித்தி
கோதில்லா ஆவின்நெய் கனியும்போல
கூறினேன் உலகோர்கள் கொடுமைதீர
பேதியா மனதோர்மை யாகநின்று
பிதற்றும விப்படியே செய்தோர்க்கெய்தும்
ஜோதியா மென்மகனே யென்றுள்தாயுஞ்
சோதித்துப் பாரிந்தச் சூத்திரமுற்றே. (41)

நாற்பத்து முக்கோண பூஜாவிதி முற்றிற்று.

## அகத்தியர் கற்பக் குருநூல் 100.

## முற்றிற்று.

TAMIL NADU ARCHIVES LIBRARY EGMORE, MADRAS-600 008 L00917

பரமபதி துணை.

# திருவள்ளுவர் கற்பம் 300.

## சாஸ்திரங்கள் சேர்ந்தது.

இதில் காதாக்தசாரம் 100, கற்பக்குருநூல் 50, முப்புசூஸ்திரம் 30, வாத சூஸ்திரம் 16, முப்புக்குரு 11, வைத்தியசூஸ்திரம் 160, ஆக 7-சாஸ்திரங்கள் ஞானவெட்டி 1500-க்குச் சூஸ்திரமாகப் பாடியது இதில் குருநீர், செயநீர், பூநீர், முடிக்கும் விபரமும் முப்பூ இன்னதென்ற விபரமும் வழலை மார்க்கமும் தெளிவாய்க் கூறியுள்ளது.

நயம் பதிப்பு விலை ரூ 2—8—0.

# காகபுசண்டர் பெருநூல் காவியம் 1000.

இந்நூல் ஏட்டுப்பிரதியாயிருந்ததை அச்சிட்டு வெளியாக்கியுள்ளோம் இதில் யோகம், ஞானம், அமுர்ததாரணை, வாசி, விபரம் முதலிய அநேகமர்மங்கள் அடங்கியது முக்கியமான நூல் நயம் பதிப்பு புக் 1க்கு விலை ரூ 5—0—0.

# கருவூரார் நொண்டி யென்னும் வாத காவியம் 700.

இதில் கற்பம், வாதம், யோகம், ஞானம்; வயித்தியம், முதலியவைத நொண்டிச்சிந்தாகவும் மற்றும் பல சந்தங்களாகவும் பாடியிருக்கிறார் முக்கியமான நூல்.

நயம் பதிப்பு விலை ரூ 2—0—0.

# அகத்தியர் கற்பமுப்புக் குருநூல்.

இதில் கற்பவிதிகளும் முப்பூ விபரமும் பற்பம், செந்தூரம் சுண்ணம், மெழுகு, தைலம், கைபாகஞ் செய்பாக முறைகளும் நாற்பத்தி முக்கோண சக்கரத்தின் பூஜாவிதிகளும் அடங்கியது. விலை ரூ1—4—0.

ஜி. இராமசாமிக்கோன்,

இ. ராம. குருசாமிக்கோனார் சன்,

புத்தகசாலை, புதுமண்டபம், மதுரை.